Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00




தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 14 திங்கட்கிழமை (31.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 31



நேர்மையோடு உறுதியாக... 04



நாளை சூரன்போர் 02



வைகோ இன்னும் திருந்தவில்லை 12



மாகாணப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் 06

## தமிழ் பேசும் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து
# ஈ.பி.டி.பி. உயர்மட்டப் பிரதிநிதிகள் சுதர்சன நாச்சியப்பனுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்பேசும் மக்கள் முகம்கொடுத்துவரும் அரசியல் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து, இந்திய காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுதர்சன நாச்சியப்பனுடன், ஈழமக்கள் ஜனநாயகக கட்சியின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான உயர்மட்ட பிரதிநிதிகள் விரிவான பேச்சுவார்த்தையினை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருக்கும் சுதர்சனநாச்சியப்பனுடனான இச்சந்திப்பானது நேற்று முன்தினம் கொழும்பு கில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது பிரதானமாக தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து



விரிவாக பேசப்பட்டது. இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பயனாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதை மேலும் வளர்த்தெடுத்து அதற்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தமிழ்மக்கள் விரும்பும் அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வுகாண முடியும் என்பதையே தாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவாதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உயர்மட்ட பிரதிநிதிகள் இச்சந்திப்பின் போதும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். இதன் அடிப்படையில் அண்மையில் பல்வேறு தமிழ் கட்சிகளையும் அழைத்து புதுடில்லியில் சுதர்சன நாச்சியப்பன் நடத்தியிருந்த மாநாட்டு முயற்சிகளை பாராட்டியும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# 2013 பொதுநலவாய மாநாடு இலங்கையில் என அறிவிப்பு



2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் 23 ஆவது அரச தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடைபெறுமென உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் 24 ஆவது அரச தலைவர்களின் மாநாடு மொரிசியஸ் தீவுகளில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் 22 ஆவது கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவடைந்துள்ள நிலையில், 54 உறுப்பு நாடுகளின் அரச தலைவர்கள் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த 17 விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் 22 ஆவது அரச தலைவர்கள் மாநாட்டின் இறுதி நிகழ்வுகள் பேர்த் நகரில் உள்ள கண்காட்சி மற்றும் கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் (15 ஆம்பக்கம் பார்க்க)

# ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட மாட்டாது


உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படமாட்டாது என ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தயாரிப்பு பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதத்தின இரண்டாம் வாரமளவில் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை பொதுமக்களுக்கு அம்பலப்படுத்துவதா இல்லையா என்பதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் கருத்து வெளியிட அரசு மறுப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் குறித்து உத்தியோகபூர்வமாக அரசாங்கத்துக்கு எதுவும் தெரியாத நிலையில் அது குறித்து கருத்து வெளியிட முடியாது என்றும் இந்த விஜயத்திற்கும் அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திவரும் பேச்சுக்களுக்கும் எந்தவித தொடர்புமில்லையென்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் அமெரிக்க விஜயம் மேற்கொண்டு இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுகளையும் நடத்திவருகின்றனர். இந்த நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனை (15 ஆம் பக்கம் பார்க்க)



# கூட்டமைப்புடனான சந்திப்பு கைவிட்டார் ஹிலாரி கிளின்ரன்

அரசின் எதிர்ப்புக் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவைச் சந்திக்கும் திட்டத்தை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் கைவிட்டுவிட்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் வொஷிங்டன் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் நால்வரும் அங்கு இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் பலருடனும் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனையும் இவர்கள் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியானபோதும், இதுவரை சந்திப்பு இடம் பெற்றதாகத் தகவல் இல்லை.

இந்த நிலையில் இலங்கை அரசின் எதிர்ப்புக் காரணமாக ஹிலாரி கிளின்ரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதைக் கைவிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, அமெரிக்காவின உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான கீழ் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமையை நிலைநாட்ட செயல் ரீதியான பங்களிப்பு

## கனடா தெரிவிப்பு



(ரொறன்டோ)

இலங்கையில் மனித உரிமை நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காக செயல் ரீதியான பங்களிப்பினை கனடா வழங்குமெனவும், இலங்கை விவகாரம் தொடர்பான தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாதெனவும், கனேடிய வெளிவிவகார அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளர் தீபக் ஒபராய் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டிற்கு முன்னதாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை அரசாங்கம் தீர்வு வழங்க (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான செயற்பாட்டை கனடா நிறுத்த வேண்டும்

## அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள்

இலங்கைக்கு எதிராகச் செயற்படுவதனையும் கண்டனங்கள் தெரிவிப்பதனையும் கனேடிய அரசு உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். அடுத்த பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை நடத்துவதற்கு முன்னர் இலங்கை தன்மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க வேண்டுமென கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் வலியுறுத்தியதனையடுத்தே அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையில் போர் குற்றம இடம்பெற்றதாக அபத்தமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை பக்கசார்பானது. எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு இலங்கையில் எவ்வித தடையுமின்றி நடைபெறும். மாநாட்டை வேறு இடத்தில் நடத்துவது குறித்து 54 நாடுகளைக் கொண்ட உறுப்பு நாடுகளில் எந்த நாடும் கோரவில்லை. (15 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி மாநாடு, கண்காட்சி வவுனியாவில் கோலாகல ஆரம்பம்



(வவுனியா)

உள்ளூர் அபிவிருத்தியினூடாக தேசிய அபிவிருத்தி என்ற தொனிப்பொருளில் வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு அபிவிருத்திக்கான முன்னோடிக் கண்காட்சி நேற்றுக் காலை 9.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பமாகியது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களின் கீழ்வரும் 34 உள்ளூராட்சி சபைகளும் பங்குகொள்ளும் இக்கண்காட்சியானது இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

கண்காட்சியில் பங்குகொள்ளும் உள்ளூராட்சி சபைகள் தனித்தனியே பிரமாண்டமான கூடங்கள் அமைத்து தமது எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை காட்சிப்படுத்தியுள்ளன. நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் முதல் 1 இலட்சம் வரையான மக்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் வருகைதரவுள்ளனர்.

அவர்களுக்கான விசேட போக்குவரத்து, வீதி ஒழுங்கு, குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி, நகர அபிவிருத்தி, பொதுச் சுகாதார சேவை, ஆயுர்வேதம், திண்மக்கழிவுப் பொறிமுறை, வீதிப்பயன்பாட்டுச் சேவை, மூலிகைப் பொருள் உற்பத்தி என பலவழிகளிலும் மேற்கொள்ளப்படும் சேவைகள் ஊடாக வருமானத்தைப் பெருக்குவதும் அதன்மூலமாக தேசிய அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதையும் இலக்காகக் கொண்டே இந்தக் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் புத்திஜீவிகள், கல்விமான்கள், நிபுணர்களின் விவாதங்கள், கருத்துக் களங்கள் இடம்பெற்றன.

இந்நிகழ்வை கைத்தொழில் துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம்.சாள்ஸ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

2009 இல் முதல்முதலாக யாழ். மத்திய கல்லூரியில் உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் நடைபெற்றன. இரண்டாவது முறையாக இவ்வருடம் வவுனியாவில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# மீள்குடியேறிய கொக்கிளாயில் நிரந்தர தபாலகம் திறப்பு

(கொக்கிளாய்)

மக்கள் மீள்குடியேறியுள்ள கொக்கிளாய்ப் பிரதேசத்தில் முதன்முதலாக நிரந்தர தபால் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதனால் மீள்குடியேறிய மக்கள் உட்பட அனைவரும் பெரும் நன்மையடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அஞ்சலதிபர் புஸ்பநாதன் கலந்துகொண்டு தபாலகத்தை திறந்துவைத்தார்.

இப்பகுதியில் முன்னர் தபாலகம் இல்லாத காரணத்தால் 20 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அளம்பில் தபாலகத்திற்கே இப்பிரதேச கடிதங்கள் சேர்க்கப்பட்டன. இதனால் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வந்தனர்.

அத்துடன் இப்பகுதியில் இயங்கும் பாடசாலைகளுக்கான சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அறிவித்தல்கள் போன்றவை தபால் மூலம் வந்தால் அவையனைத்தும் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கே அனுப்பப்படும். இதனால் சுற்றறிக்கைகள், அறிவித்தல்களை உரிய முறையில் செயற்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்பட்டது.

மேற்படி குறைகளை கவனத்தில் எடுத்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலேயே தற்போது நிரந்தரமாக தபால் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. (17)

# பயனுள்ளதாக அமைந்த வாசிப்பு மாதம்

(சுன்னாகம்)

'அறிவால் நிரம்பிய சமுதாயமொன்றை ஆக்கிடுவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற 2011 வாசிப்பு மாதத்தில் சுன்னாகம் பொது நூலகத்தில் விசேட வாசிப்புக் கூடத்தை ஒக்டோபர் 1 முதல் 31 வரை வாசகர்களுக்காக நூலகர் க.சௌந்தரராஜன் ஏற்பாடு செய்திருந்தார்.

இவ் விசேட வாசிப்புக் கூடத்தில் வாசகர்களுக்கு பல புதிய நூல்கள், சஞ்சிகைகள் அறிமுகப்படுத்தியும், சுன்னாகம் நூலகத்தில் கிடைக்காத நூல்கள், சஞ்சிகைகள் இரவல் பெற்றும் காட்சிப்படுத்தியிருந்தார்.

அவர் விசேட வாசிப்புக்கூடம் பற்றித் தெரிவிக்கையில், இம்முறை பருத்தித்துறையில் தனிப்பட்ட உசாத்துணை நூலகத்தை பேணிவரும் இ.து.குலசிங்கம் அவர்களின் நூலகத்திலிருந்த நூல்கள், சஞ்சிகைகள் விசேட வாசிப்புக் கூடத்தை அலங்கரித்தன. இப்பிரதேசம் சார்ந்த தகவல்கள் தனிப்பட்டவர்களின் சேமிப்புக்களில் அல்லது வேறு நூலகங்களில் இருக்கின்ற போது விசேட வாசிப்புக் கூடத்தின் மூலமாக இப்பிரதேச வாசகர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வகையில் இந்த வருடம் வாசிப்பு மாதச் செயற்பாடுகள் பயனுள்ள வகையில் இடம்பெற்றது எனத் தெரிவித்தார்.

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையால் சுன்னாகம் பொது



நூலகம் 2009 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தின் சிறந்த நூலகமாத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டு மாவட்டத்தின் சிறந்த நூலகமாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2009 இல் மாகாணத்தில் முதலாமிடம் பெற்றமைக்காக உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சால் நூலகர் க.சௌந்தரராஜன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


# முருகன் ஆலயங்களில் நாளை சூரன்போர்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில் நாளை சூரசங்கார நிகழ்வு இடம்பெறவுள்ளது. இணுவில் கந்தசுவாமி கோவிலில் மாலை 2.00 மணிக்கும், நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மாலை 4.00 மணிக்கும் சூரன் போர் நிகழ்வுகள் நடைபெறும்.

சூரன் போர் கந்த ஷஷ்டி இறுதி நாளில் இடம்பெறும் நிகழ்வு ஆகும். சீவான்மா மும்மலங்களால் கட்டுப்பட்டது. இந்த அசுரப் பிடியிலிருந்து விடுதலை பெற்று முத்தியின்பத்தை அடைதலே ஆன்மாக்களுக்கு வகுக்கப்பட்ட இலக்கு. அசுர குணங்களை அழித்து நன்னிலை அடைதலை குறியிட்டு நிற்கும் நிகழ்வாக சூரன் போர் விளங்குகிறது.

சூரபன்மன் ஆணவ மலம் கொண்டவன். தாரகாசுரன் மாயா மலம் உடையவன். சிங்கமுகன் கன்ம



மலத்தின் வடிவம். இவர்களை ஞானம் என்கின்ற முருகனது வேல் வெல்கிறது. அதாவது ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் இருந்து வீடுபேறடைய ஞானம் என்ற இறை சக்தியால் மட்டுமே முடியும் என்பதையே இன் நிகழ்வு அறிவுறுத்துகின்றது.

# வல்வெட்டித்துறையில் சிறுவர் பூங்கா பிரச்சாரத்தின் மூலம் குழப்ப முயற்சி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகரசபையால் தீருவில் பகுதியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை சிலர் திரிபுபடுத்தி இணையத்தளங்களில் செய்தி வெளியிட்டு குழப்ப முயற்சித்து வருவதாக நகரசபைத் தவிசாளர் இ.ஆனந்தராஜா குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் அவர் இதுபற்றி குறிப்பிடுகையில், சிறுவர் பூங்கா அமைப்பதில் ஏற்கனவே இருக்கின்ற இடங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவித்தார்.

ஒருசிலர் சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக தவறான செய்திகளை இணையத்தளங்களூடாக சர்வதேச ரீதியில் பரப்புகின்றனர். இவ்வாறு செயற்படுபவர்கள் குறித்து அவதானமாக செயற்படுமாறும் கேட்டுக்கொண்டார். (116)

# திருப்புகழை முன்னிலைப்படுத்த அனைவரும் முயல வேண்டும்

## மயூரகிரி சர்மா தெரிவிப்பு



(வல்வெட்டித்துறை)

திருப்புகழுக்கு இசைக் கச்சேரிகளிலும் பக்தி வழிபாடுகளிலும் முதன்மை தரப்பெற வேண்டும் என்று தெரிவித்தார் நீர்வை தி.மயூரகிரி சர்மா.

வல்வெட்டித்துறை வயலூர் ஸ்ரீ முருகன் திருக்கோயிலில் நேற்று மாலை இடம்பெற்ற கந்த ஷஷ்டிச் சொற்பொழிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்போதெல்லாம் திருப்புகழ் பயிற்சி நம்மவர்களிடம் அருகி வருகிறது. இது இங்கு மட்டுமல்ல, இந்தியாவிலும் இதே நிலை தான். கச்சேரி என்றாலும் இருக்கிற தெலுங்குக் கீர்த்தனைகளை எல்லாம் பாடி முடித்து கடைசியாகத் தான் வித்துவான் திருப்புகழ் பாடுகிற வழக்கம் எப்படியோ ஏற்பட்டு விட்டது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பிரபல இசைக்கலைஞர் ரீ.எம்.கிருஷ்ணா தமது கச்சேரியின் ஆரம்பமாக திருப்புகழைப் பாடி புதிய ஒரு பாணியை உருவாக்கி வரவேற்புப் பெற்றார். இவர் வழியே, திருப்புகழை முன்னிலைப்படுத்த எல்லோரும் முயல வேண்டும்.

அற்புதமான இசைப்பொக்கிஷமாக பக்திச் சுவை சொட்டும் அமிர்தக்கடலாக, செழுந்தமிழ்ப் பிரந்தமாக இருக்கிற திருப்புகழ்களை இளமையிலேயே கற்க எல்லோரும் முன் வரவேண்டும்.

துர்நடத்தையுடையவராகி, நோயாளியாகி, தற்கொலை செய்ய முயன்ற இளைஞன் பெருமான் அருளால் ஞானத் தபோவனராகி அருணகிரிநாதராய் பாடியது இப்பிரபந்தம்.

ஆதலால் நாம் முன் செய்த பிழைகள் யாவும் அழித்து சுலபமாக இறைவனோடு நம்மைக் கூட்டி வைக்கக்கூடியது இப்பிரபந்தமாகும்.

மேலும், இன்றைக்கும் கந்த ஷஷ்டி அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டே

இருக்கின்றன. சிக்கலிலே இறைவன் வேல் வாங்குகிற போது சுவாமியின் திருவடிவத்திலிருந்து வியர்வை பொங்குகிறது. செந்திலாண்டவன்

சூரசம்ஹாரத்திற்காக கடலோரம் வருகிற போது கடல் பின் வாங்குகிறது என்றும் குறிப்பிட்டார்.

கந்தஷஷ்டிக் காலத்தில் தொடர்ச்சியாக இவ்வாலயத்தில் இடம்பெற்ற இச்சொற்பொழிவு நிகழ்வில் ஏராளமான அடியவர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வீழ்ந்து காயம்

(வடமராட்சி)

யாழ்ப்பாணம் வல்லைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவீழ்ந்த நபர் படுகாயமடைந்துள்ள சம்பவம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, யாழ். - பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் தனியாகச் சென்று கொண்டிருந்த குறித்த நபர் வல்லைப் பாலத்தடியில் மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மரியசெல்வம் (வயது - 45) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-100)

## சிறு செய்திகள்

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் கடவுளின் குழந்தைகள் நிறுவனமும் கல்விச் சமூகத்தினரும் இணைந்து நடத்தும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தையும் சிறுவர் தினத்தையும் முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வாசிப்புத்திறன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (உ)

அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழவேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## உலகமய மந்திரக்கோல்

கடந்த ஆண்டு டிசம்பர் 17-ல் டுனீசியாவில் முகமட் பவாசி என்பவர் தன்னைத்தானே தீமூட்டிக் குளித்தார். அந்தத் தீ, டுனீசியா ஜனாதிபதி பென் அலியைத் தலைமறைவாகச் செய்தது. எகிப்தின் சர்வாதிகாரத் தலைவராக இருந்த ஹூசைன் முபாரக்கை ஆட்சியை விட்டு ஓடச்செய்தது. ஏமன், ஜோர்டான், பஹ்ரைன், குவைத், சவூதி உள்ளடங்கிய அரபுலகை ஆட்டம் காண வைத்து, லிபியத் தலைவர் கடாபியையும் அழித்து முடித்திருக்கிறது.

அந்தத் தீ அடிப்படையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து உருவான தீயென வர்ணிக்கிறார்கள். சர்வாதிகாரம் ஊழலுடன் உணவுப் பிரச்சினையும் இணைந்து, மக்கள் கிளர்ச்சி வெடித்து, அரபு நாடுகளில் அரசியல் மாற்றம் நிகழ்கிறது. மக்களின் கோபம் அந்தந்த நாட்டு ஆட்சியாளர்களைக் குற்றவாளிகளாக்கி வீழ்த்தினாலும், உண்மையான குற்றவாளிகள் யார் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார நெருககடியாக முளைத்த விதையே தன் கொடுங்கிளைகளை எண்ணெய்க் கிணறுகளை நோக்கி நீட்டியிருப்பதை விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உணவு விலையேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், நிதி நெருக்கடி, கல்வியில் குறைந்த முதலீடு, உணவுப் பற்றாக்குறை என்று பல பிரச்சினைகளால் அந்நாடுகளின் பொருளாதாரம் ஆட்டம் கண்டு வருகிறது. நியூயோர்க்கின் "வோல்தெரு" பற்றியெரிந்து பரவுகிறது. அதன் வெக்கை ஏழைநாடுகளுக்கும் வீசி அங்கெல்லாம் பசித்தீ கொழுந்து விட்டு எரிகிறது. அதனால் உண்டான மூன்றாமுலக மக்களின் கோபத்தை அமெரிக்கக் கூட்டு நாடுகள் தூண்டிவிட்டு அங்கிருந்து எண்ணெய் வளத்தைக் கொள்ளையடித்துப் பங்குபோட முனைகின்றன.

அத்துடன் உலக உணவு வர்த்தகத்தையும் முழுதாகக் கைப்பற்றிவிடும திட்டத்திலும் அமெரிக்கா இறங்கியிருக்கிறது. உலக வர்த்தகர்கள் ஒன்றுகூடி உலக விவசாயத்தை உயர்த்தும் தொலைநோக்குத் திட்டம ஒன்றை தாவோஸ் நகரில் அமெரிக்க ஆசியுடன் தயாரித்துள்ளனர். உலகத்தில் உணவு உற்பத்தி குறைந்து வருவதால் ஆண்டுக்கு 2 சதவீதம் உணவு உற்பத்தி பெருகவும், 2 சதவீதம் பசுமையக விளைவைக் குறைக்கவும், 2 சதவீதம் வறுமையைப் போக்கவும் திட்டம் தயாராகிவிட்டதாக அறிவித்திருக்கிறார்கள்.

உலகின் மாபெரும் உணவு அரக்கர்களான 17 நிறுவனங்கள் இதில் பங்கேற்றுள்ளன. கார்கில், கோகோ கோலா, டூபாண்ட், பெப்சி, கிரா∴ப்ட் ∴புட், சேப் மில்லர், மிட்லாண்ட், யூனிலிவர் உள்ளிட்ட உலகை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கும் 17 பன்னாட்டுப் பெருமுதலைகள அவை.

உலக விவசாயத்தை முற்றிலுமாகத் இந்தத் தொழில் நிறுவனங்கள் கைப்பற்றுவதற்கான மகத்தான சதித் திட்டத்தை யு.எஸ். எய்ட் என்று கூறப்படும் அமெரிக்க ஏஜென்சி ∴போர் இன்டர்நஷனல் டெவலப்மெண்ட தயாரித்துள்ளது. "உணவில் அரசுத்துறையுடன் தனியார் கூட்டுறவு வளர்ந்து உற்பத்தி உயர வளரும் நாடுகள் முதலீடு செய்யவேண்டும்" என்று யு.எஸ். எய்ட்டின் ,நிர்வாக இயக்குநர் தாவோஸில் திருவாய் மலர்ந்துள்ளார்.

விவசாயம் இந்தப் பன்னாட்டு நிறுவனங்களின் கைப்பற்றாக மாறும்போது உணவு உற்பத்தியில் ஒரு நாட்டின் தன்னிறைவு புறந்தள்ளப்பட்டு ஏற்றுமதியே குறிக்கோளாக மாறும். விவசாயம் மேலும் மேலும் இரசாயனத்துக்கு அடிமையாகி மண்வளம் சுரண்டப்படும். ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு மேல்மட்ட ஊற்றுகள் வற்றும். பசுமைப்புரட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். கிராமங்களைவிட்டு விவசாயிகள் வெளியேறுவர். சிறு விவசாயிகளின் நலன்களைக் காப்பாற்றி வரும் அரச திணைக்களங்களின் இடத்தைப் பன்னாட்டு ஏகபோகங்கள் ஆக்கிரமிக்கும். மானியங்கள் நிறுத்தப்படும். நிதிநெருக்கடியைக் காரணம் காட்டி உணவு வர்த்தகத்தில் தனியார் நுழைவு படிப்படியாக அனுமதிக்கப்படலாம் என்றெல்லாம் நிதித்துறை வல்லுனர்கள் எச்சரிக்கிறார்கள்.

உலக வர்த்தக அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள 149 நாடுகளில 105 நாடுகள் தங்கள் உணவுத் தேவைக்கு இறக்குமதியை நம்பியுள்ளன. வடக்கு நாடுகள் உணவு வழங்கும் நாடுகளாகவும் தெற்கு நாடுகள உணவுக்காகத் திருவோடு ஏந்தும் நாடுகளாகவும் மாறிவிட்ட சூழ்நிலை. உலகமய மந்திரக்கோல் கொண்டு அமெரிக்காவின் கீழுள்ள இந்தப் பன்னாட்டு நிறுவன உணவு வர்த்தகர்கள் நம்மையெல்லாம் உண்டு கொழுக்க முன்னேறிவருகிறார்கள். இரையாகிவிடாமல் தப்புவதே நம்முன் உள்ள சவால்.

- ஆசிரியர்

# தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்காணிக்க விசேட ஏற்பாடு

## தயாராகிறது சட்ட ஏற்பாடு

(கொழும்பு)

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளைக் கண்காணிப்பதற்காக தனியான தணிக்கைக் குழுவொன்றை அமைக்கும் வகையிலான சட்டமூலமொன்று விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாக கலாசார மற்றும் கலைவிவகார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சட்டமூலம் அடுத்தமாதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவு உள்ளதாகவும் அமைச்சர் ஏக்கநாயக்க கூறினார். தரம்குறைவான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவது குறித்து ஜனாதிபதிக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இது இப்போது பாரிய கரிசனைக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

தரம் குறைவான நிகழ்ச்சிகள் குறித்து பெற்றோரிடமிருந்தும் கரிசனையுள்ள ஏனைய பல பிரஜைகளிடமிருந்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்நிகழ்சிகளில் சிலவற்றினால் சமூகப் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. இவற்றில பெரும்பாலான நிகழ்ச்சிகள் பதின்ம வயதினரையும் வயது வந்தோர்களையும் இலக்கு வைத்து தயாரிக்கப்படுபவையாகும்.



இந்நிகழ்ச்சிகள் வா்ழ்க்கை குறித்து தவறான தகவல்களை இளம் பருவத்தினருக்கு வழங்குகின்றன என அமைச்சர் தெரிவித்தார். இத்தணிக்கை குழுவானது பல துறைகளைச் சார்ந்த பிரசித்தி பெற்ற நபர்களைக்கொண்டாக, திரைப்படங்களை தணிக்கை செய்யும் குழு போன்றதாக இருக்கும் எனவும் அமைச்சர் ஏக்கநாயக்க கூறினார்.

## வடக்கு, கிழக்கில் மீண்டும் அதிகரிக்கிறது டெங்கு அபாயம்

(கொழும்பு)

மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் டெங்குநோய் பெருகும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

பருவப்பெயர்ச்சிக் காலநிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் டெங்கு அபாயம் மீண்டும் அதிகரித்துள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹீபால தெரிவித்தார்.

எனவே சூழலைச் சுத்தமாக வைத்திருப்பது தொடர்பில் பொதுமக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலை போன்ற பொது இடங்களையும் சுத்தமாக வைத்திருப்பது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 145 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆஸியில் கண்டனப் போராட்டம் தொலைக்காட்சிக்கு எதிராக கோஷம்

(கொழும்பு)

பக்கச் சார்பாக செய்திகளை வெளியிடுவதாகக் கூறி கொமன்வெல்த் மாநாடு நடைபெறும் பேர்த் நகரில், ஏ.பி.சி தொலைச்சாட்சி நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகளுக்கு சார்பான வகையில் செய்திகளை வெளியிடுவதாக இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் ஏ.பி.சி அலைவரிசை மீது குற்றஞ்சாட்டியதுடன், கண்டனம் தெரிவித்து கோசங்களையும் எழுப்பியிருந்தனர். அத்துடன் இதுதொடர்பாக தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலான கடிதம் ஒன்றையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏ.பி.சி தொலைக்காட்சி நிறுவன அதிகாரிகளிடம் கையளித்திருந்தனர். இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஆவணப்படங்களை அவுஸ்ரேலியாவின் ஏ.பி.சி தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பியிருந்தது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்க ஆகியோருக்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பான செய்திகளையும் ஏ.பி.சி முக்கியத்துவப்படுத்தி வந்தது.

## சீனக் கம்பனியுடன் பனிப்போர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது அரசு

(கொழும்பு)

காலிமுகத்திடலுக்கு அருகில் பலநோக்கு கட்டடத்தொகுதியை அமைக்கவுள்ள சீன நிறுவனம் அதற்கான முற்பணத்தை வழங்க மறுத்துள்ளது. குறித்த கட்டடம் அமையவுள்ள இடத்தை முழுமையாக விற்பனை செய்வதில்லை என்ற அரசாங்கத்தின் கொள்கையை அடுத்தே இந்த மறுப்பை சீன நிறுவனம் வெளியிட்டுள்ளது.

CATIC என்ற இந்த சீன நிறுவனம், தமக்கான காணிப் பரப்பை 99 வருட குத்தகைக்கு பெற்றுக் கொள்வதை விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமக்கு குறித்த நிலத்தை முழுமையாக விற்பனை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய உறுதிமொழி மீறப்பட்டமைக்கு எதிராக சட்ட உதவியைப் பெறவுள்ளதாக CATIC நிறுவனம் கூறியுள்ளது.

இதற்காக முன்னர் இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த காணிப்பரப்பு சங்ரி லா ஹோட்டலுக்கு வழங்கப்பட்டுள்ளமையை குறித்த சீன நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

CATIC நிறுவனமும் இலங்கையின் நிதியமைச்சும் குறித்த நிர்மாணம் தொடர்பில் கடந்த பெப்ரவரியில் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டன. இதன்படி 50 மில்லியன் டொலர்களை முற்பணமாக வழங்க வேண்டும். அத்துடன் மீதித்தொகையான 86 மில்லியன் டொலர்களை 2011 ஏப்ரல் 21க்குள் வழங்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

எனினும் அதனை சீன நிறுவனம் வழங்கவில்லை. இதன்காரணமாக அந்த நிறுவனத்துடனான உடன்படிக்கை இரத்தாகிவிட்டதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. எனினும் தாம் சட்ட உதவியை பெறவுள்ளதாக CATIC நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## கொத்மலையில் மின் உற்பத்தி விரைவில் ஆரம்பமாகவுள்ளது

(கொழும்பு)

மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தி நிலையத்தில் நிர்மாணப்பணிகள் விரைவில் நிறைவடையும் என மின்சக்தி வலுத் துறை அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த மின் நிலையத்தில் மின் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன், மேலதிகமாக 150 மெகா வாட் மின்சக்தியினை நுகர்வோருக்கு வழங்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 5 கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழான பணிகளில் பெரும்பான்மையானவை நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கான நிதி ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு வங்கியினால் 3 ஆயிரத்து 781 கோடியே 70 இலட்சம் ஜப்பானிய யென்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர இலங்கை மின்சார சபை 854 கோடியே 80 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற நேர்மையோடும் உறுதியோடும் உழைப்போம்

## ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல்



(யாழ்ப்பாணம்)

சீரான சிவில் நிர்வாகம் சிறந்த அபிவிருத்திப்பணிகள் மற்றும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கும் வகையிலான அரசியல் தீர்வு என சகலவற்றிற்காகவும் நாம் நேர்மையோடும் உறுதியோடும் தொடர்ந்தும் உழைப்போம் என ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் பரமலிங்கம் அருள்கரன் தாக்கப்பட்ட சம்பவத்தின் உண்மை நிலை குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனலை தீவுப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளை சட்ட விரோதமான முறையில் பிடித்து சிலர் வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். தகவல் அறிந்த ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் திரு.பரமலிங்கம் அருள்கரன் அவர்கள் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தியதோடு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதோடு இச்சட்டவிரோத நடவடிக்கையினை தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

இதையடுத்து, குறித்த சட்ட விரோத செயலில் ஈடுபட்டு வரும் நபர்களில் ஒருவரான அனலைதீவைச் சேர்ந்த காண்டீபன் என்ற இளைஞரும், அவரது நண்பரான இன்னொருவரும் இணைந்து கட்டாக்காலி கால்நடைகள் இருக்கும் இடத்தை காட்டுவதாக கூறி ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பிரதி தவிசாளரான பரமலிங்கம் அருள்கரன் அவர்களை யாரும் அறியாமல் தந்திரமாக அழைத்துச் சென்று தனிமையான இடமான புளியந்தீவில் வைத்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதோடு அவர் மீது கொலை முயற்சித் தாக்குதலும் நடத்தியுள்ளனர். தாக்குதலில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொண்ட ஊர்காவற்துறை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் பரமலிங்கம் அருள்கரன் அவர்கள் பொதுமக்களினதும், கடற்படையினரது உதவியோடு அனலை தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தார்.

இதே வேளை தாக்குதலில் ஈடுபட்ட காண்டீபன் என்ற நபர் சில காலங்கள் எமது கட்சியில் இருந்தார். அவர் இரண்டு வருடங்களுக்கு முன் அவருடைய செயற்பாடுகள் கட்சியின் கொள்கைக்கு விரோதமாக செயற்பட்டமையினால் கட்சியினால் விலக்கி வைக்கப்பட்டு பொது வாழ்வில் ஈடுபட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இப்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

இது போன்ற சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட எத்தனிப்போர் எவராக இருப்பினும் சாதாரண பொதுமக்களின் நலன் கருதி சட்டம் · ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தவறின் எது வித பாகுபாடுமின்றி சம்பந்தப்பட்ட நபர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் மாறாக நடப்பவர்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் செற்படுவ்தோடு இவ்வாறான தகவல்களை அறிந்திருப்போர்கள் தொடர்ந்தும் உரிய இடங்களோடு தொடர்பு கொண்டு சட்ட விரோதச் செயல்களை தடுத்து நிறுத்தும் கடமையுணர்வோடு செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இணையத்தளத்தில் சூரன்போர் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலய சூரன்போர் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் குறிப்பிட்ட நேரத்தில் சூரன்போர் நிகழ்வுகள் அளவெட்டி இணையத்தளத்தில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளதாகவும் இதனை அடியார்கள் பார்த்து முருகன் அருளைப் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நாளை அனைத்து முருகன் ஆலயங்களிலும் சூரன் போர் நடைபெறுவது வழமையாகும். (உ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்க சி. பிரிவின் ஏற்பாட்டில் ஆரோக்கிய வாழ்விற்கான கொழுப் புணவுகள் என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு எதிர் வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூதாய மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் கருத்தரங்கை வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ)

# வைத்தியசாலையின் பெண் ஊழியர்கள் அடிப்படை வசதிகள் இன்றி அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனாவைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் வைத்தியசாலையில் அடிப்படைவசதிகள் இல்லாது நாளாந்தம் தாம் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மலசலகூட வசதிகள் சீர்செய்யப்படாது இருப்பதால் தாம் பேருந்து நிலையத்திற்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

நிர்வாகப் பகுதியில் 50இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வரும் நிலையில் பெண் ஊழியர்கள் பயன்படுத்தும் ஒரே ஒரு மலசல கூடமும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இங்கு மின்சார விநியோகம் சீரின்மை குறிப்பாக மின்குமிழ்கள் அடிக்கடி பழுதடைவதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு காணப்படுவதுடன் கதவுகளும் பூட்டமுடியாத நிலையில் காணப்படுவதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நிர்வாக அதிகாரியிடம் முறையிட்டும் அதற்கு சாதகமான நடவடிக்கைகள எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதைவிட குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். நிர்வாகப் பகுதியில் இருந்துவரும் குடிநீருக்கான குழாயிலிருந்து பலமாதங்களாக நீர் சீராக வருவதில்லை எனவும் இதனால் குடிப்பதற்கு அத்தமற்ற நீரையே தமது தேவைக்கு பயன்படுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்னறனர்.

இவ்விடயம் குறித்து வைத்திய சாலைச் சமூகம் கவனம் எடுத்து ஊழியர்களின் அடிப்படை வசதிகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தரிசு நில நெற்செய்கையில் விவசாயிகள் மும்முரம்

தீவகப் பிரதேசத்தில் பெரும் போக தரிசு நில நெற் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் ஏரி - 362, ஏரி-353 இன விதை நெல்லை இலவசமாக விநியோகம் செய்துள்ளனர்.

இதில் மண்டைதீவில் 127பயனாளிகள் 107ஏக்கரிலும், நெடுந்தீவில் 81 பயனாளிகள் 81 ஏக்கரிலும், பங்குடுதீவில் 14 பயணாளிகள் 23 ஏக்கரிலும், நயினாதீவில் 29 பயனாளிகள் 36 ஏக்கரிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி தரிசு நிலங்கள் 1990 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு 21 வருடங்களுக்குப் பின் நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

# பூநகரிப் பிரதேச செயலகத்தில் உளவளத்துணை தின நிகழ்வு

(முழங்காவில்)



தேசிய உளவளத்துணை தின நிகழ்வுகள் பூநகரிப் பிரதேச மட்டத்தில் பூநகரிப் பிரதேச செய லகத்தில் கடந்த 24ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை டாக்டர் ஜெயராஜ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக 661ஆம் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் அபயக்கோன்,பூநகரி பங்குத் தந்தை வண பி.பிராயனும் கலந்துகொண்டு உளவளத்துணை சம்பந்தமான கருத்துகைளை வழங்கினர்.

பூநகரிப் பகுதி கிராம சேவகர்கள்,பிரதேசசெயலக அலுவலர்கள் உட்பட நூற்றுக்குமேற்பட்டோர் கலந்துகொண்டனர். (112)



நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள கோண்டாவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர். எல்.இளங்கோவன் மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவனுக்கு சான்றிதழ் வழங்குவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.






நிவாரணம் மற்றும் அபிவிருத்திக்காக செரண்டிப் நிறுவனமும் சாஜா நம்பிக்கை நிதியமும் யாழ். தகவல் வழிகாட்டல் மத்திய நிலையத்துடன் இணைந்து அண்மையில் குருநகர் சனசமூக நிலையத்தில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் வைத்தியர் ஒருவர் குழந்தைக்கு சிகிச்சை வழங்குவதையும் ஏற்பாட்டாளர்கள் மருந்துவகைகளை இலவசமாக பொதுமக்களுக்கு வழங்குவதையும் காணலாம். (105)

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(காரைநகர்)

ஈழத்துச்சிதம்பரத்தில் மாணிக்கவாசகர் மடாலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் ஈ.எஸ். பி.நாகரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகசபைத்தெரிவு இடம் பெற்றது. ஈ.எஸ்.பி. நாகரட்ணம் தலைவராகவும் க.சோமசேகரம் உபதலை வராகவும் நா. பால கிருஸ்ணன் செயலாளராகவும் க.பிரதீபன் உப செயளாளாராகவும் ச.இராசநாயகம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் 23 நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பொதுச்சபைக் கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி திருமதி ம.மகேந்திரா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் வைத்திய சாலையின் செயற்பாடுகள் குறித்து அங்கத்தவர்களுடன் கலந்துரையாடவுள்ளார். அத்துடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதாக வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு அறிவித்துள்ளது.(உ-18)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(31.10.2011-திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 14 ஆம் நாள்.
இராகுகாலம் 7.33-9.03, சுபநேரம் 12.03 -1.33வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப. 4.54 வரை
திதி: பஞ்சமி பி.ப 4.58 வரை
ஸ்கந்தபஞ்சமி.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- காசுக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், கடன் படுதல், வீண் கோபம்.

ரிஷபம:- குடும்பத்தில் மகிழ்ச்சி காசுவரும், வீண் வசந்திகள், எதிரியை வெல்லுதல்.

மிதுனம் :-காசுக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் அலைச்சல், நினைத் ததைச் சாதித்தல், தேகம் பலவீனம்

கடகம்:- குடும்பத்தில் குதூகலம், காசுவரும், தேக ஆரோக்கியம், தொழில் விருத்தி, மாமனார் பகை.

சிம்மம்:- காசுக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, கடன் படுதல், வீண் அலைச்சல், புத்திரபாசம்.

கனனி :- குடும்பத்தில் குதூகலம், காசுவரும், நண்பர் வருகை, உண்மை நட்பு, பெரியோர் பாராட்டு.

துலாம் :-பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், வீண் கோபம், நண்பர்கள் வருதல், தேகசுகம் பாதிப்பு.

விருச்சிகம்:- குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், தேக சுகம் நன்று, அயலார் வெறுப்பு, விருந்துபசாரம்.

தனுசு:- பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் சினம், மனக்குறை, அதிகாரப் போட்டி.

மகரம:- குடும்பத்தில், மகிழ்ச்சி, பணம் வரும், வீண், கோபம், நண்பர் உதவி, தேகம் நல்ல சுகம்.

கும்பம் :- பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பநிலை, அயல் வீட்டார் தொல்லை, சுற்றத்தார் ஆதரவு.

மீனம் :- குடும்பத்தில் சலனம், பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், வீண் ஆசை நினைத்ததைச் சாதித்தல்.

# பருவ காலமழை தொடர்கிறது இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கிளிநொச்சி)

யாழ். குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தற்போது கனமழைபெய்து வருவதால் தற்காலிக வீடுகளில் வசித்து வரும் மீளக்குடியேறிய மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் குறிப்பாக அதில் வாழ முடியாது உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. மழைக்கு முன்னர் தமக்கு வீட்டுத்திட்ட வசதிகள் கிடைக்கும் என எதிர்ப்பார்த்திருந்த இம்மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் கிடைக்காத நிலையில் பருவமழை ஆரம்பித்துள்ளதால் அந்த மக்கள் பல்வேறு அசெகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மிகவும் வறுமை நிலையில் உறவினர்கள் இன்றி வாழும் மக்கள் தற்காலிக வீடுகளில் மழை ஒழுங்குகளில் நனைந்தே வாழ்ந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் நோய்தொற்று மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் குறிப்பாக டெங்கு நோய் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பருவமழையினால் சாந்தபுரம், முறிகண்டி, செல்வபுரம் உள்ளிட்ட தாழ்வான பிரதேச மக்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை யாழ். குடாநாட்டில் வடிகால் அமைப்புக்கள் சீராக இல்லாத பகுதிகளில் நீர் வழிந்தோட முடியாது வீடுகளுக்குள் புகுந்துள்ளன. இதே வேளை விளையாட்டு மைதானங்களிலும் நீர் நிரம்பியுள்ளதால் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (77,எஸ்)

## டெங்குநோய்த் தாக்கத்தால் மன்னாரில் 20 பேர் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயால் இதுவரையில் 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் மன்னார் மாவட்ட பொதுவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் தெரிவித்தார். கடந்த சில தினங்களாக டெங்குநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 10 பேர் மாத்திரமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தனர் இருப்பினும் தற்போது டெங்குநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20ஆக உயர்வடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்

அதிகளவான டெங்குநோயாளர்கள் மன்னார் பனங்கட்டிக்கோட்டு கிராமத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதாகவும் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையினைத் தொடர்ந்து டெங்குநோய்த் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்புக் காணப்படுவதாகவும் அவ் வைத்தியர் குறிப்பிட்டார்.

## பயிர்களை நாசமாக்கும் கட்டாக்காலி ஆடு, மாடுகள்

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேசத்தில் கால போக விதைப்பு ஆரம்பித்து முடிவடையும் நிலையில் பருவமழை பெய்ததினால் முளைத்துவரும் நெற்பயிர்களை கட்டாக்காலி மாடு ஆடுகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பூநகரி கமநலச்சேவை அலுவலகத்தாலும், கமக்கார அமைப்புக்களாலும் கடந்த மாதம் 15ஆம் திகதியில் இருந்து கால் நடைகளை கட்டுப்படுத்துமாறு பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட நிலையிலும், மந்தை வளர்ப் போர் உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில் கட்டாக்காலி மந்தைகளை பிடிப்பதற்கு பிடிகாரரை நியமிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (112)

## விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் இலங்கை விலை மதிப்பாளர் சேவையின் உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்கள் வகுப்பு 111 தரம் 11 பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், செயலாளர், நிதித்திட்டமிடல் அமைச்சு செயலகம், கொழும்பு 01 என்னும் முகவரிக்கு 18.11.2011 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்கிடைக்கக் கூடியதாக விண்ணப்பப்படிவ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிமாவட்ட விலை மதிப்பாளர் வகுப்பு 111 தரம் 11 பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிட வேண்டும்.

இது தொடர்பான மேலதிகவிபரங்களை ஒக்டோபர் மாதம் வெளியான வர்த்தமாணி பத்திரிகையிலும், தின முரசு காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

## துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கும் நிகழ்வுகள்




(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்கப் பிரிவிற்குட்பட்ட 16 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவ மாணவிகள் 185 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துரையினை பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளருமான சிறீரங்கேஸ்வரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கான துவிச்சக்கர வண்டிகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிலவேஸ்திரி அலென்ரின் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்கள் மாணவ, மாணவிகள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டம் சென்றலைஸ் சொக்ஸ் சம்பியன்





விருந்தினரிடமிருந்து சென்றலைஸ் சொக்ஸ் அணித் தலைவர் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும், வெற்றியின் மகிழச்சியை சென்றலைஸ் சொக்ஸ் அணியினர் வெளிப்படுத்துவதையும் காணலாம். (படப்பிடிப்பு: பா.சிகான்)

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சென்றலைஸ் சொக்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 306 B1 அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்திய மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இரவு மின்னொளியில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென்றலைஸ் சொக்ஸ் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

மின்னொளியில் நடைபெற்ற இப் போட்டியில் இடையிடையே மழை குறிக் கிட்டபோதும் போட்டி தொடர்ச்சியாக நடைபெற்றது.

இரு அணிகளுமே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும் இறுதியில் சென்றலைஸ் சொக்ஸ் அணி 35-30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்கள் பிரிவில் ஆட்டநாயகனாக சென்றலைஸ் சொக்ஸ் அணியைச் சேர்ந்த என். திவாகரும், பெண்கள் பிரிவில் ஆட்டநாயகியாக பமிலியஸ் அணியைச் சேர்ந்த என். துஷ்யந்தியும் தெரிவானார்கள்.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பமிலியஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்., 93)

## கால்பந்துத் தொடர் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இக்கால்பந்துப் போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள பாடசாலை அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற இடம்பெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளைய தினம் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி இடம்பெறும் என்றும், ஏனைய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் விரைவில் நடை பெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய ஆட்டம்


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் வடக்குகிழக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதவுள்ளது.

இப்போட்டி கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் முதலிரு இடங்களைப் பிடித்துக்கொள்ளும் அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும்.

இதில் வடமேல் மாகாணம் வடக்கு, மேற்கு என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு அணிகள் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் சம்பியனான பமிலியஸ் அணித் தலைவி விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதையும், வெற்றியின் மகிழ்ச்சியை அணியினர் வெளிப்படுத்துவதையும் காணலாம். இப்போட்டித் தொடரில் பட்டர்பிளஸ் அணியை 24-04 என்ற புள்ளிகள் அடிப்படையில் பமிலியஸ் அணி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படம் : தயாளபாலன்)

## அரையிறுதி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலக ஊழியர்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியில் சங்கானை பிரதேச செயலக அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவிருந்த இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மாவட்ட செயலக அணியும், வேலணைப் பிரதேச செயலக அணியும் மோதவிருந்தது.

மழை காரணமாக மைதானத்தில் வெள்ளம் அதிகம் இருந்தமையால் போட்டியை நடத்த முடியாமல் போனது.

இதன் காரணமாக இப்போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், இப்போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## சாதனை வீரர் கௌரவிப்பு



(நெல்லியடி)

மாகாண மட்டப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற வல்வை விளையாட்டுக்கழக வீரர் மயூரன் அவ்விளையாட்டுக்கழகத்தினால் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்டப் போட்டியில் ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற இவர் பிரதேச மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி பல, சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

இவரின் சாதனையைக் கௌரவிக்கும் வகையில் வல்வை விளையாட்டுக் கழகத்தினால் பாராட்டு விழா ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

இதன் போது இவர் கௌரவிக்கப் பட்டார்.

வல்லை விளையாட்டுக்கழகத்திற்கும், எமது ஊருக்கும் மாகாண மட்டத்தில் பெருமை சேர்ந்த இவர்,. தொடர்ந்தும் தனது திறமைகளை வெளிக்கொணர்ந்து உயர்வான நிலையை அடையவேண்டும் என்றும், இவரைப் போன்று ஏனையவர்களும் எமது கழகத்திற்கும், ஊருக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் வல்வை விளையாட்டுக்கழகத்தினர் பாராட்டு விழாவின் போது தெரிவித்தனர். (12)

## சிறுவர்களுக்கான கால்பந்து

(யாழ்ப்பாணம்)

கால்பந்தை வளர்க்கும் முகமாக சென் ஜோன்ஸ் கல்லூரியினால் நடத்தப்படும் சிறுவர்களுக்கான கால்பந்துப் போட்டி எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளது. சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டியில் 10 வயதிற்குட்பட்ட வீர, வீராங்கனைகள் மோதவுள்ளதாகவும், யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் இத்தொடரில் பங்குபற்றவுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வருடாவருடம் நடத்தப்படும் இப்போட்டித் தொடரில் இம்முறை பெண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் இரு பிரிவுகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரு கல்லூரி அணிகளுக்குமிடையிலான நட்புறவுக் கால்பந்துப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் மிகவும் சிறப்பான முறையில் ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 5-0 என்ற கோல் கணக்கில் சிறப்பான வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே சிறப்பான முறையில் ஆடியதால் இறுதி வரை கோல் எதனையும் போட முடியவில்லை. இதன் காரணமாக இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

ஒட்டுமொத்த அடிப்படையில் இரண்டு பிரிவுகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (20)

# மின்னல் வேக கால்பந்தாட்ட விழா ஆனைக்கோட்டை யூனியன் சம்பியன்





யூனியன் அணித் தலைவர் அனுசரணையாளரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதையும், வெற்றிக் களிப்பை யூனியன் அணி வீரர்கள் வெளிப்படுத்துவதையும் காணலாம். (படம் பா. சீகான்)

(யாழ்ப்பாணம்)

மின்னல் வேக கால்பந்து விழாவின் வெற்றிக் கிண்ணத்தை ஆனைக்கோட்டை யூனியன் அணி கைப்பற்றிக் கொண்டது.

தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கச் செயலாளர் (பிரித்தானியா) மற்றும் பிரித்தானிய தமிழ் கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருமான எட்வின் குணரட்ணத்தின் அனுசரணையுடன் யாழ். கால்பந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடன் யாழ் லீக்கின் அங்கம் வகித்த அணிகளுக்கிடையிலான மின்னல் வேகக் கால்பந்துப் போட்டி நேற்றைய தினம் குருநர் சென் றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இக்கால்பந்துத் தொடரில் பாடுமீன், றோயல், சென் மைக்கல், சென் அன்ரனீஸ், கலைவாணி, பாரதி, சென் றோக்ஸ், யூனியன், அரியாலை ஐக்கியம் போன்ற ஒன்பது அணிகள் பங்குகொண்டன.

விலகல் முறையில் நடைபெற்ற இத்தொடரின் முதல் அரையிறுதியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும், அரியாலை ஐக்கியம் அணியும் மோதின. இதில் யூனியன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் குருநகர் சென் றோக்ஸ் அணியும், நாவாந்துறை கலைவாணி அணியும் மோதின. இதில் சென் றோக்ஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இதனைத் தொடர்ந்து இறுதிப் போட்டி 4.15 மணிக்கு நடைபெற்றது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும், சென் றோக்ஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே சிறப்பான பந்துப் பரிமாற்றத்தையும், வேகமான ஆட்ட முறையையும் வெளிப்படுத்திய யூனியன் அணி முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, 3-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய யூனியன் அணி மேலும் மூன்று கோல்களைப் போட்டது. இறுதியில் 6-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இத்தொடரில் அதிக கோல்களைப் போட்ட யூனியன் அணி வீரர் நிரேசன் சிறந்த வீரராகவும், சிறந்த தடுப்பாளராக அதே அணியைச் சேர்ந்த டேவிட்டும், சிறந்த எதிரணி வீரராக சென் றோக்ஸ் அணியைச் சேர்ந்த றோசான் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் இத்தொடரில் பங்குபற்றிய அனைத்து அணிகளுக்கும் தலா நான்காயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது. மழைக்கு மத்தியிலும் போட்டி தடங்கலின்றி இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. இப்போட்டியின் பிரதான நடுவராக அஜித்குமாரும், பக்க நடுவர்களாக ஜெனின், சுரேஸ் ஆகியோர் கடமையாற்றினர்.(எப்.எஸ்)

## தொடக்கம் சரிவர அமையவில்லை



(கொல்கத்தா)

சிறந்த தொடக்கம் கிடைக்காமையே இங்கிலாந்து அணிக்கெதிரான ருவென்ரி-20 போட்டியில் தோல்வியடைந்தமைக்கு காரணம் என்று இந்திய அணி கப்டன் டோனி தெரிவித்தார்.

நாங்கள் 15 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம். ஏதாவது ஒரு துடுப்பாட்ட வீரர் கடைசி வரை களத்தில் நின்றிருக்க வேண்டும். 150 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க வேண்டும் என்று இலக்காகக் கொண்டிருந்தோம். ஆனால் சிறந்த தொடக்கம் கிடைக்கவில்லை. இந்த ஆடுகளம் மிகவும் வேகம் குறைந்து இருந்ததால் ஓட்டங்கள் எடுக்க சிரமமாக இருந்தது. அது மட்டுமின்றி அவர்கள் பந்தை மெதுவாக வீசுவதில் சிறப்பாக செயற்பட்டனர் என்றார்.

## இலங்கை கரப்பந்து அணியில் மூன்று முன்னாள் போராளிகள்



(கொழும்பு)

ஆசியப் பிராந்திய மாற்றுவலுக் கொண்டோருக்கான மகளிர் கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப்போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியில் முன்னாள் பெண் போராளிகள் மூவர் இடம்பெற்றுள்ளதாக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச் சுற்றுப் போட்டி நவம்பர் 17ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை சீனாவில் நடைபெறவுள்ளது. இதில் செல்வி மலர்விழி பரமலிங்கம், அந்தோனி சாமி மேரி அனிற்ரா, நவேந்திரன் நவலோஜினி ஆகிய மூன்று வீராங்கனைகளுமே தேசிய அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இவ்வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் கொழும்பில் வழங்கி வருகின்றது.

இவ்வருடம் வலுவிழந்தோருக்கான கரப்பந்தாட்ட உலக சம்பியன்ஷிப் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி வெண்கலப்பதக்கத்தைப் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

## முழுமையான வீரராக மெஸ்ஸி இல்லை



ஆர்ஜென்ரீன வீரர் மெஸ்ஸி கால்பந்துப் போட்டியில் முழுமையானதொரு வீரர் என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என பிரேசில் ஜாம்பவான் பீலே தெரிவித்துள்ளார்.

கால்பந்து விளையாட்டைப் பொறுத்த வரையில் அதில் தலையைப் பயன்படுத்தி கோல் அடிப்பதிலும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். தலையை பயன்படுத்தி விளையாடும்போது ஒரு கால்பந்து வீரர் முழுமையடைகின்றார்.

எனது காலத்தில் இருந்த வீரர்களில் பாபிமூர், றியாசெட்டோ, பாசெட்டி ஆகியோரைக் கடந்து பந்து எடுத்துச் செல்வது கடினம். இவர்களுடன் விளையாடியதில் நாம் பெருமையடைகின்றேன்.

அந்த வகையில் தற்போதுள்ள வீரர்களில் மெஸ்ஸி சிறந்தவர் தான். ஆனால் அவர் தலையைப் பயன்படுத்தி கோல் அடிப்பதில் வல்லவர் இல்லை. தலையைப் பயன்படுத்தி கால்பந்து விளையாடும்போது ஒரு வீரர் முழுமை அடைகின்றார். அந்த வகையில் பிரேசிலின் நெய்மர் இதில் வல்லவராகவுள்ளார். இளம் வீரர்கள் எல்லா வடிவங்களிலும் வல்லவராக இருப்பது தற்போதைய காலததில் அரிதாகவே உள்ளது. இதற்கு இன்றைய காலமே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

## வீரர்கள் ஒப்பந்தப் பட்டியல் ஏ பிரிவில் ஹோலி

(கொல்கத்தா)

இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்த பட்டியலில் விராத் ஹோலி, இஷாந்த் சர்மா ஆகியோருக்கு ஏ பிரிவு வழங்கப்பட்டுள்ளது. இதே பிரிவில் யுவராஜ் சிங்கிற்கு மீண்டும் இடம் கிடைத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,), வீரர்களுக்கு பிரிவு அடிப்படையில் ஆண்டு தோறும் சம்பளம் வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான புதிய ஒப்பந்த பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதன்படி மொத்தமுள்ள வீரர்களின் எண்ணிக்கை 24இல் இருந்து 36 ஆக உயர்த்தப்பட்டது.

இதில் 11 பேர் சி பிரிவில் இடம் பெற்றனர். ஏ பிரிவில் 9 இல் இருந்து 12 பேராக அதிகரிக்கப்பட்டது. சம்பள விகிதத்தில் (ஏ- 1 கோடி, பி- 50 இலட்சம், சி- 25 இலட்சம்) கடந்த ஆண்டு பி பிரிவில் இருந்த யுவராஜ் சிங், ஏ பிரிவிற்கு உயர்ந்துள்ளார். புதிதாக விராத் ஹோலி, இஷாந்த்சர்மாவும் இதில் இடம் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவிலும் இடம் பெற்றுள்ள வீரர்கள்:

ஏ - பிரிவு (1 கோடி)

டோனி, சச்சின், சேவாக், கம்பிர், ராவிட், லஷ்மன், ரெய்னா, ஹர்பஜன்சிங், சகீர்கான், யுவராஜ்சிங், விராத் ஹோலி, இஷாந்த் சர்மா.

பி - பிரிவில் (50 இலட்சம்):

பிரவீண் குமார், பிரக்யான் ஓஜா, அஷ்வின், ரோகித் சர்மா, ஜடேஜா.

சி - பிரிவு (25 இலட்சம்)

ஸ்ரீசாந்த், அமித் மிஸ்ரா, புஜாரா, மிதுன், வினய்குமார், ரகானே, முனாப் படேல், முரளி விஜய், சிகர் தவான், பார்த்திவ் படேல், சகா, பத்ரிநாத், மனோஜ் திவாரி, பியுஸ் சாவ்லா, தினேஷ் கார்த்திக், உனத்கட், உமேஷ் யாதவ், ராகுல் சர்மா, வருண் ஆரோன்.



# வீசா கட்டணம் விரைவில் குறையும்

## அரசு நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான வீசா பெற்றுக் கொள்வதற்கு இலங்கையில் அறவிடப் படும் நிர்வாகக் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத் தியுள்ளது. மிகவிரைவில் இக்கட்டணத் தை குறைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இது குறித்து இந்தியாவில் இருந்து வேண்டுகோள் முன்வைக்கப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப் பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்தார். குறிப்பாக தெற்காசிய நாடுகளுக்கான வீசா நிர்வாகக் கட்ட ணங்களை குறைத்து சலுகையென்றை வழங்குமாறு வேண்டுகோள் முன் வைக்கப்பட்டதாக கூறினார்.

எனவே அது தொடர்பிலான பிரேர ணை ஒன்று நிதியமைச்சுக்கு முன்வைக் கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சுட்டிக் காட்டினார். தெற்காசிய வலய நாடு களுக்கு மாத்திரமன்றி ஏனைய அனைத்து நாடுகளுக்கும் வீசா அனுமதிக்கான நிர் வாகக் கட்டணத்தை குறைப்பதற்கான பிரேரணையொன்று முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். தற்போது வீசா அனுமதிக்காக இலங் கையில் 50 அமெரிக்க டொலர்கள் அற விடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க விரைவில் வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்களைத்தடுத்து நிறுத்தவும் சிறுவர் இல்லங்களை முறையாக நிர்வகிப்பதற்கும் அரசு புதிய சட்ட விதிகளை அமுல் செய்யவுள்ளது.

இதன் முதற்கட்டமாக சிறுவர் இல் லங்களை நிர்வகிப்போர் குறித்து புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங் கம் கவனம் செலுத்தியுள்ளது. சிறுவர் இல்லங்களில் இடம்பெறும் சில குற்றச் செயல்கள் காரணமாக புதிய குழுக் களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங் களில் ஈடுபடும் நபர்களுக்கு மரண தண்டனை வழங்குவது தொடர்பிலான பிரேரணையை அதற்கு பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சந்தரா இந்த வங்ஸ கூறினார்.

# அமெரிக்க அழுத்தம் இலங்கை மீது இல்லை

## விக்கிரமபாகு கருணாரட்ண

(கொழும்பு)

**இலங்கை அரசுடன் அமெரிக்க அரசின் உறவுகள் அனைத்தும் சுமூகமாகவே உள்ளது. இலங்கை மீது அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகிக்கிறது என்று கூறப்படுவது எல்லாம் சுத்தமான பொய் என்று கூறுகிறார் விக்கிரமபாகு கருணாரட்ண.**



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக் காவை மாத்திரம் நம்பியிருக்காது பொது மக்கள், தொழிலாளர்கள், தொழில்சங் கங்கள் அரசியல் கட்சிகள் ஊடகங்கள் போன்றவற்றுடனும் பேசவேண்டும் எனவும் விக்கிரமபாகு கருணாரட்ண மேலும் தெரி வித்துள்ளார்.'

ஏனெனில் அமெரிக்க அரசுக்கு தேவை யானது மக்களின் பாதுகாப்பல்ல. அவர் களுடைய பொருள், காணிகளை கைப் பற்றிக்கொண்டு தனது மூலதனத்தை விஸ்தரித்துக்கொண்டு பன்னாட்டு நிறு வனங்களை இங்கு அமைப்பதே.

விடுதலைப்புலிகளையும் மக்களையும் அழிப்பதற்கு அமெரிக்காவே உதவி செய்துள்ளது. விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களிலேயே இது தெளிவாக புலப் படுகிறது. இலங்கை அரசினதும் அமெரிக்க அரசினதும் உறவுகள் இப் பொழுதும் சுமுகமாகவே உள்ளன. அமெரிக்கா இலங்கை மீது நிர்ப்பந்தங் களை விதிப்பது சும்மா பம்மாத்தே ஆகும்.

ஆகவே தமிழ்தேசியக்கூட்டமைப்பு அமெரிக்க அரசை மாத்திரம் நம்பியிருக் கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள் ளார். மேலும், சர்வதேச சதிக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் துணை போகின்ற னர் என அரசு சாடுவதெல்லாம், தமது சதி வெளியே தெரிந்துவிடப்போகின்றதே என்ற அச்சத்தில்தானே தவிர கூட்ட மைப்பினர் ஒபாமாவோடு பேசுவார்கள் என்ற அச்சத்தில் அல்ல.சர்வதேச சமூகம் தலையிடுவதால் உள்நாட்டில் பிரச்சினை வரும் என்பதெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த ஒரு நாட்டிலும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சர்வதேச சமூகம் தன் பங்களிப்பை வழங்கியிருக்கிறது என்றார்.

# வீதி விபத்து இருவர் பலி

(கொழும்பு)

குருநாகலில் இடம்பெற்ற வீதி விபத்தில் நிந்தவூரைச் சேர்ந்த தாயும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள துடன் மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் கடந்த வெள்ளி இரவு இடம் பெற்றுள்ளது.

நிந்தவூரில் இருந்து இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவு செய்வதற் காக மக்காவுக்கு செல்லும் ஹாஜிகளை வழி யனுப்பிவிட்டு கொழும்பிலிருந்து வீடு திரும்புகையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ வையும் பொதுநலவாய நாடுகளின் தலைவி இரண்டாவது எலிசபெத் மகாராணியும் இளவரசர் பிலிப்பும் இரவு விருந்துபசாரத்திற்கு வரவேற்றபோது

# போதைப் பொருள் கடத்தல் இரு பாகிஸ்தானியப் பெண்கள் கைது

(கொழும்பு)

இலங்கைக்குள் சட்டவிரோதமாக போதைப் பொருளை கடத்திவர முற் பட்ட பாகிஸ்தானியப் பெண்கள் இருவர் கட்டுநாயக்காவில் கைது செய்யப்பட் டுள்ளனர்.

3.3கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடலுக்குள் மறைத்து வைத்து கடத்தி வர முற்பட்டபோதே பிரஸ்தாப இரண்டு பாகிஸ்தான் பெண் களும் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி சுமார் 10 மில்லியன் என காவற்துறையின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவின ருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, கராச்சியில் இருந்து இலங்கை வந்த இந்தப் பெண்கள் கைதுசெய்யப்பட் டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட பெண்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு, அவர்கள் உடலுக்குள் மறைத்து கடத்தி வந்த ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பெண் களையும் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து,போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர்.

# நிர்வாகசேவை வெற்றிடங்கள் புதிய நியமனங்கள் விரைவில்

(கொழும்பு)

நிர்வாகசேவையில் உள்ள வெற்றி டங்களை நிரப்புவதற்கு உள்நாட்டு அலு வல்கள் அமைச்சு ஏற்பாடு செய்து வருகிறது.

நாடு முழுவதும் பொது நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு பற் றாக்குறை நிலவுவதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு குறிப்பிடுகிறது. பிரதேச செயலக மட்டத்தில் இந்தப் பற்றாக்குறை நிலவுவதாக அமைச்சர் டபிள்யூ.டி.ஜே செனவிரத்ன தெரிவித்தார்.

500 பேருக்கு பற்றாக்குறை நிலவுகின்ற போதும் உடனடியாக 220 பொதுநிர்வாக சேவை உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். கடந்த முறை இடம் பெற்ற போட்டிப் பரீட்சையின் பெறு பேறுகளின் அடிப்படையிலும், அடுத்த வருடம் நடைபெறவுள்ள போட்டிப் பரீட் சையின் மூலமும் உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மீனவர்களை மீட்டுத்தாருங்கள் பிக்குகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)



கற்பிட்டி கண்டல்குழி பிரதேசத்தில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த நிலை யில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த இரண்டு பிக்குகள் மீண்டும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த மீனவர்கள் இருவரின் தாயார் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக எமது செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

அந்தமான் தீவில் சிக்கியுள்ள ஆறு மீனவர்களையும் உடனடியாக நாட்டிற்கு அழைத்து வருமாறு வலியுறுத்தி கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிக்குகளும் மீனவர்கள் இருவரின் தாயாரும் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்துடன் நேற்றைய தினம் மேலும் இரண்டு பிக்குகள் இணைந்துகொண்டனர்.

16) $\frac{1 - 0.02}{0.6 + 0.38}$ இன் பெறுமானம் காண்க.

17) காரணி காண்க $16x^2 - 9y^2$

18) 8, 12, 15 பொ.ம.சி காண்க

19) $2(10 - x) + 19$ தீர்க்க

20) $4x^2 + \square\, xy + 9y^2$ என்னும் கோவையில் உள்வரவேண்டிய எண் யாது? நிறைவர்க்கமாகத் தருக.

21) $a^2 + b^2 = 15$ $ab = 17$ எனின் $(a+b)$ இன் பெறுமானம் காண்க.


22) மடக்கை வாய்ப்பாடு உபயோகியாது பெறுமானம் காண்க.
$2 \lg 5 + \lg 8 - \lg 20$

23) $2^x \times 16^x = 1024$ எனின் x ஐக் காண்க.

24) செவ்வக வடிவான காணியின் சுற்றளவு 401 m. அதன் அகலம் 50.5 m ஆயின் நீளம் யாது?

25) x, 2x, 6 ...................... என்பன கூட்டல் விருத்தியில் இருப்பின்,
1. x ஐக் காண்க.
2. கூட்டல் விருத்தியைக் காண்க.





பா. ஜெயரூபன் (ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 3 மணி

# கல்வி முரசு

## கணிதம் : பகுதி II




சி. சிறிதரன் (ஆசிரியர்)

**யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

1) அலுமாரி ஒன்றைச் செய்வதற்கு ரூபா. 53.000 செலவாகியது. அதற்குத் தேவையான மூலப்பொருட்களின் விலைக்கும் கூலிக்குமிடையே உள்ள விகிதம் 3:4 ஆகும். மூலப்பொருட்களின் விலை விகிதம் 3: 2 இல் அதிகரித்து கூலி விகிதம் 4:5 இல் குறைந்தது எனின்,

1. ஆரம்பத்தில் மூலப்பொருட்களின் செலவைக் காண்க.
2. ஆரம்பத்தில் கூலிச் செலவைக் காண்க.
3. புதிய மூலப்பொருள் செலவு யாது?
4. புதிய கூலிச் செலவு யாது?
5. அத்தகைய அலுமாரி ஒன்றைச் செய்ய செலவாகும் பணத்தைக் காண்க.


2) 


தரப்பட்டுள்ள வரைபடத்தில் ABC என்பது CA = CB =30 cm $\hat{C} = 90^0$ ஆன ஒரு செங்கோண, இருசமபக்க முக்கோண உலோகத் தகடாகும். C எனும் மையத்தையும் 7 cm ஆரையும் கொண்ட ஓர் ஆரைச்சிறை CMN (நிழற்றப்பட்ட பகுதி) இத்தகட்டிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது.

1. தகடு ABC யின் பரப்பளவைக் காண்க
2. அகற்றப்பட்ட ஆரைச்சிறை CMN, 7 cm ஆரையைக் கொண்ட வட்டத்தின் எப்பின்னமாக அமையும்?
3. ஆரைச்சிறை CMN இன் பரப்பு யாது?
4. எஞ்சிய பகுதி ABNM இன் பரப்பு யாது?
5. முக்கோணத் தகடு ABC 3 cm ஒரு சீரான தடிப்பத்தைக் கொண்டுள்ளதாயின், இத்திண்மத்தை இனங்காண்க.

3) x, y, z ஆகிய தொடைகளைக் கொண்ட அகிலத் தொடையிலுள்ள 47 மூலகங்களும் தரப்பட்ட வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பரம்பியுள்ளன. இதனைப் பயன்படுத்தி

1. $n(x \cap y \cap z)$ ஐக் காண்க
2. $x' \cap z$ என்பதனை வகைக் குறிக்கும் பிரதேசத்தைக் நிழற்றிக் காட்டுக.
3. $n(x \cap z)$ ஐக் காண்க
4. தொடை x ற்கும் y ற்கும் இடையிலுள்ள தொடர்பை தொடைக்குறியீட்டில் தருக.
5. $x \cap y$ ற்குச் சமனான தொடையை எழுதுக.



4) குறித்த நாள் ஒன்றிலே உப அஞ்சல் அலுவலகம் ஒன்றிலிருந்து பெற்ற தொலைபன்னி அழைப்புக்களுக்காகச் சந்தாதாரர்கள் எடுத்த நேரம் பற்றி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்போது பெற்ற தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| எடுத்த நேரம் (நிமிடம்) | நடுப்பெறுமானம் x | சந்தாதாரர்களின் எண்ணிக்கை $f$ | $f\chi$ |
|---|---|---|---|
| 0 -2 | | 3 | |
| 3 - 5 | | 4 | |
| 6 - 8 | | 8 | |
| 9 - 11 | | 6 | |
| 12 - 14 | | 3 | |
| 15 - 17 | | 1 | |

1. மேற்குறித்த அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து நிரல் $\chi$ யும் $f\chi$ யும் பூரணப்படுத்துக.
2. அத்தினத்தில் தொலைபன்னி அழைப்புக்களை எடுத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை யாது?
3. இப்பரம்பலின் ஆகார வகுப்பைக் காண்க.
4. 11 நிமிட நேரத்திற்கு மேற்பட்ட தொலைக்காட்சி அழைப்புக்களை எடுத்தவர்கள் மொத்தத்தில் எத்தனை சதவீதமாகும்?

5) A என்ற பாத்திரத்தில் 2 சிவப்பு, 3 மஞ்சள் நிறப்பந்துகளும் B என்ற பாத்திரத்தில் 2 சிவப்பு, 2 மஞ்சள் நிறப் பந்துகள் ஒரே பருமனுடையனவாக இருந்தன. A இல் இருந்து B இற்கு ஓர் பந்தையும் பின்பு B இல் இருந்து A இற்கு ஓர் பந்தையும் எழுமாறாக மாற்றப்பட்டது.

1. இந்நிகழ்ச்சிக்கான மாதிரிவெளியை மரவரிப்படம் ஒன்றில் காட்டுக.
2. மாற்றப்பட்ட இரு பந்துகளும் ஒரே நிறம் உடையதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
3. மாற்றப்பட்ட இரு பந்துகளும் வேறுபட்டதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

## கணிதம் : பகுதி I


1) K{a,e,i,o,u} எனின்தொடை K இன் முதலிமை யாது?

2). சுருக்குக. -7.5 + 2.5

3) $\frac{3x}{2} + 9$ x ஐத் தீர்க்குக.


4) 2.5 g ஐ mg இல் தருக.

5) 3 kg அரிசியின் விலை 180/= எனின் 750g அரிசியின் விலை யாது?

6) 

$\triangle$ PQS $\triangle$ QSR ஒருங்கிசைவதற்கான காரணம் யாது?




7) 

உருவில் O° இன் பெறுமானம் யாது?

..........................................................................

..........................................................................

8) 

உருவில் x° கணிக்க.


..........................................................................

..........................................................................

9) 11 ஆவது சதுர எண் யாது?

..........................................................................

..........................................................................

10) 

o விலிருந்து A யின் திசைகோள் யாது?

..........................................................................

..........................................................................

11) $\left[\frac{64}{27}\right]^{-2/3}$ பெறுமானம் காண்க.

..........................................................................

12. நாணயம் ஒன்றும் சதுர முகித்தாயக் கட்டை ஒன்றும் ஒருங்கே எறியும்போது நடைபெறும் நிகழ்வுகளுக்கான மாதிரி வெளியை தெக்காட்டு தளத்தில் காட்டுக.

..........................................................................

..........................................................................

13. $\frac{\lg x^{2/5}}{\lg x^{1/2}}$ இன் பெறுமானம் காண்க.

..........................................................................

..........................................................................

14. $\frac{x}{20} = \cos 37^{\circ}$ (sin 530 = 0.7986) ஆயின் x இன் பெறுமானம் காண்க.

..........................................................................

..........................................................................

15. 10 1/2 cm ஆரையுள்ள கோளத்தின் மேற்பரப்பு யாது?

..........................................................................



# நான் ஒரே மாதிரியாக நடிக்கிறேனா?



இந்த தீபாவளிக்கு சென்னையில் மூன்று படங்கள் மட்டுமே வெளியாகியுள்ளன. அதில் ஒன்று 'ரா-1' என்ற ஹிந்திப் படம். மற்றைய இரண்டு படங்களில் விஜய்யின் வேலாயுதம் ஒன்று. அடுத்தது சூர்யா, ஸ்ருதி ஹாசன் நடித்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் வந்திருக்கும் 7-ஆம் அறிவு.

வேலாயுதம் படத்தின் வெற்றியை ஊடகச் சந்திப்பில் பகிர்ந்து கொண்டு பேசிய விஜய், நான் நடிச்ச 52 படங்களில் வேலாயுதம் படம் பெரிய ஹிட்டாகியுள்ளதாக கூறுகிறார்கள் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்படியொரு வாய்ப்பைக் கொடுத்த இயக்குனர் ராஜாவுககு வெறும் நன்றி என்று ஒரு வார்த்தையில் சொன்னால் அது போதாது என்றார்.

நான் ஒரே மாதிரியாக நடிப்பதாக சொல்வது தவறு. காவலன் படத்தில் என் பாணி இல்லை. சித்திக் வேறு மாதிரி அப்படத்தை எடுத்தார். கதைக்கு என்ன தேவையோ அதை மட்டும் செய்வேன். அடுத்து நான் நடிச்ச நண்பன் படம பொங்கலுக்கு வெளியாக இருக்கிறது. டைரக்டர் ஷங்கர் இப்படத்தை ஹிந்திப் பட ரேஞ் சுக்கு இயக்கி இருக்கிறார். ஏ.ஆர்.முருகதாஸ் படத்தில் நடிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. விரைவில் அறிவிப்பு வெளியாகும். அடுத்த வருடம் கவுதம் மேனன் இயக்கத்தில் யோகஹன் அத்தியாயம் ஒன்று படத்தில் நடிக்கிறேன் என்றார் விஜய்.

இயக்குநர் ராஜா பேசுகையில், வாழ்க்கையில் எனக்கு மிகப் பெரிய திருப்பம் தந்த படம் வேலாயுதம். வட நாட்டிலிருந்து ரா-1 என்ன ரா-100 வந்தாலும் சரி, எத்தனை அறிவு வந்தாலும் சரி, விஜய்யின் வேலாயுதம் படம் தனித்து நின்று வெற்றி பெறும் என்று கூறியுள்ளார்.

எப்பவும் தன்னுடைய படங்களைப் பற்றி மட்டுமே பேசும் ராஜா, இம்முறை தீபாவளிக்கு வர இருக்கும் மற்ற படங்களையும் சவாலுக்கு அழைப்பது போல பேசியது பத்திரிகையாளர்கள் உடபட அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

# கையேந்தும் அரசியல்

எங்களால் செய்ய முடிந்த, முடிகின்ற ஆகக் கூடிய அரசியற் செயற்பாடாக நடக்கின்ற தேர்தல்களில் எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து அவர்களை எமது சட்டபூர்வமான பிரதிநிதிகள் ஆக்கிவிட்டு - அதன் மூலம் உலக சமூகத்தின் அங்கீகாரத்தையும் அவர்களுக்கு நாமே பெற்றுக்கொடுத்து விட்டு - அவர்கள் உருப்படியாக ஏதாவது செய்வார்கள் எனக் கண்கள் பனிக்கக் காத்திருக்கிறோம்.

இப்போது, எங்களது சார்பில், அவர்களை அனுப்பி, மீண்டும் அனைத்துலக சமூகத்திடம் நாம் கையேந்தி நிற்கின்றோம்.

எந்த மேற்குலகும் இந்தியாவும் விடுதலைப் புலிகளை அழித்து, பல்லாயிரம் தமிழர்களைப் படுகொலை செய்வித்து, எமது இனத்தையே நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தன என்று நாம் புலம்பித் தீர்த்தோமோ, அதே மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் வாசல்களில் மண்டியிட்டு நாம் இப்போது நியாயம் வேண்டிக் கிடக்கிறோம்.

உலக வல்லரசுகள், எமக்கு அரசியல் அநீதி இழைத்தவர்களைத் தண்டிப்ப துடன், எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மாற்றீடாக ஏதாவதொரு நற்பயனையும் பெற்றுத் தருவார்கள் என ஏங்கி இருக்கிறோம்.

எமது இனத்தின் புலம்பெயர்ந்த சமூகத்தினராகிய நாங்கள் - எமது அறிவு, உணர்வு, உழைப்பு, வளம், சக்தி, நேரம் எல்லாவற்றையும் இந்த வல்லரசுகளின் காலடியிலேயே ஒட்டுமொத்தமாகக் காணிக்கையாக்கி விட்டு வரம் வேண்டித் தவமிருக்கின்றோம்.

- புதினப்பலகையில்
தி.வழுதி கட்டுரையிலிருந்து...



போயே போச்சு..! போயிந்தே..! இட்ஸ் கான்..!

## மொழி

சொற்களுக்கிடையிலுள்ள மௌனம் அபாயம் நிறைந்தது
என்று நீ சொன்னாய். நிழல்களின் கூட்டங்கள்
மனதின் பல அடுக்குகளில் மிதந்தபடி இருக்கின்றன
என்று நீ சொன்னாய். உனது ஆய்வுக்கூடத்தின்
பரிசோதனைப் பொருளாக நான் இருந்தபொழுது
எனது மூலகங்களைத் தனித்தனியாகப் பிரித்து வெவ்வேறு
குடுவைகளில் நிரப்பினாய். நீர், நிலம், காற்று, ஆகாயம், தீ
ஐந்தாகப் பிரிந்த பிறகும் எதிலும் அடைபடாமல்
கொஞ்சம் மீந்து நின்றேன். ஆம், எனது ஆறாவது
மூலகம் மொழி.

- பிரேம் : ரமேஷ்

# வெற்றி பெற சுய பிம்பம்



சுய பிம்பம் என்பது ஒரு குழநதையின் மனநல உருவாக்கத்தில் முக்கியமானது. பொதுவாக, ஒவ்வொரு மனிதனுக்குமே சுய பிம்பம் என்பது முக்கியமானது.

ஒரு குழந்தைக்கு, தான் உருவாகும் காலகட்டத்தில், நேர்மறை மற்றும் எதிர்மறை சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு குழந்தை எதிர்காலத்தில் வெற்றிகரமான மனிதனாக உருவாகுமா? இல்லையா? என்பதை, அந்தக் குழந்தையின் இளம் வயது சுய பிம்பமே முடிவு செய்கிறது.

Separate but Equal என்ற ஆங்கிலப் படத்தில் ஒரு அதிர்ச்சிகரமான காட்சி உண்டு. கறுப்பின குழந்தைகளைக் கொண்ட ஒரு குழுவிடம், 2 பொம்மைகள் தரப்படும். அவற்றில் ஒன்று கறுப்பு பொம்மை மற்றது வெள்ளை பொம்மை. அந்த 2 பொம்மைகளில் எது அழகான பொம்மை என்று அந்தக் குழந்தைகளிடம் கேட்கப்படுகையில், அந்த கறுப்பின குழந்தைகள் அனைத்துமே, கொஞ்சமும் யோசிக்காமல் வெள்ளை பொம்மையையே அழகான பொம்மை என்று தேர்ந்தெடுக்கும். தன் இனத்தாரை ஒடுக்கும் ஒரு இனத்தாரின் நிறமே அழகானது என்று அந்தக் குழந்தைகளின் மனதில் பதிய வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், அந்தக் குழந்தைகளின் சுய பிம்பம் சிதைக்கப்பட்டுள்ளது. தான் ஒரு அழகற்ற, முக்கியத்துவமற்ற மற்றும் தாழ்வான பிறவி என்ற எண்ணம் கறுப்பினக் குழந்தைக்குள் உண்டாக்கப்பட்டுள்ளது. கறுப்பர் - வெள்ளையர் இனப் பிரச்சினையின் சமூகத் தாக்கம், ஒரு குழந்தையின் சுய பிம்பத்தில் ஏற்றப்பட்டுள்ளது. இது ஒரு எதிர்மறை சிந்தனை, அதாவது தாழ்வு மனப்பான்மை.

ஒரு குழந்தையின் சுய பிம்பத்தில் நேர்மறை சிந்தனைகளை செலுத்துவதற்கு பெற்றோர்கள் பழகிக் கொள்ள வேண்டும். தனது குழந்தை கெட்டித்தனமானது, மற்றோருக்கு முன்மாதிரியாக விளங்கக் கூடியது என்ற சிந்தனைகள் பெற்றோரிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் குழந்தையின் சுய பிம்பம் தேர்ச்சி பெறும்.

உங்கள் குழந்தைக்கு நீங்கள் பலவிதமான இலக்குகளை நிர்ணயிக்கலாம். ஆனால் அந்த இலக்கானது, அடையக்கூடிய அளவில் இருப்பது முக்கியமானது. ஒரு அடைய முடியாத இலக்கை நிர்ணயித்து, அதன்பால் குழந்தையை ஊக்கப்படுத்தி, தோல்வியடையும்போது, உங்கள் குழந்தையின் மனநிலை எதிர்மறையான விளைவுகளுக்கு சென்றுவிடும். தான் எதிலுமே தோற்கக் கூடியவர் மற்றும் தன்னால் எதுவுமே இயலாது என்ற எண்ணத்திற்கு சென்று, எந்த செயலிலும் நம்பிக்கையுடன் ஈடுபட முடியாத நிலை ஏற்படும். எனவே, இலக்கு நிர்ணயிக்கும் விஷயத்தில் நிதானமாக செயல்படுவது நல்லது.


சில பெற்றோர்கள் இவ்வாறு கூறுவார்கள், 'நான் என் குழந்தையை பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பினேன், தேவையான புத்தகங்களை வாங்கி கொடுத்தேன், உபகரணங்களையும் வாங்கிக் கொடுத்தேன். ஆனால் வெற்றிபெறவில்லை. அதன் திறமை அவ்வளவுதான்' என்பர். அத்தகைய பெற்றோரின் கருத்து தவறு.

ஏனெனில், வேண்டியதை செய்துவிட்டு ஒதுங்கிக் கொள்வது மட்டுமே பெற்றோரின் கடமையல்ல. குழந்தையிடம் அன்பும், ஆதரவும் காட்டி, அவர்களின் சுய பிம்பத்தை சிறப்பான முறையில் வார்த்தெடுக்க வேண்டும். குழந்தையைப் பற்றி நேர்மறையாக நினைப்பதை, குழந்தையின் மனதிலும் பதிய வைக்க வேண்டும்.

ஒரு குழந்தையை வெற்றிகரமான முறையில் வளர்ப்பதைவிட, இந்த உலகத்தில் பெரிய சாதனை எதுவுமே இல்லை என்று சொல்லலாம். வளர்க்கும்போதே முறையாக வளர்த்துவிட்டால், பிற்காலத்தில் பிரச்சினையைப் பற்றி சிந்திக்க வேண்டியதேயில்லை.

- நன்றி : கல்விமலர்

# அவர்களது இணையம் விடும் கொலை மிரட்டல்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சி யாக வெளியில தெரிஞ்சாலும் உள்ளுக்க புடுங்குப் பாடுகள் கனக்க நடக்குது கண்டியளோ? தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை அழிய விடாமல் கொண்டு போக வேணும் எண்டு ஒரு பகுதியும், இல்ல இல்ல ஆயுதக் கலாசாரம் அழிஞ்சு போச்சுது இனி வேட்டிக்கலாசாரம் தான் வேணும். தமிழரசுக் கட்சி தான் இருக்க வேணும் எண்டு ஒரு பகுதி யும் நிக்கினமாம் எல்லே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேவையில்ல ஆயுதக் கலாசாரத்தில இருந்து வந்தாக்கள் அதில இருக்கினம் எண்டு சொல்லிக் கொண்டு கூட்டமைப்ப உடைக்கிறதுக்கு முயற்சி நடக்குது கண்டியளோ? கூட்டமைப்பில இருக்கிற ஒரு சிலர வெளியேத்திற நோக்கத்தில தான் கண்டியளோ இந்த ஆயுதக் கலாசார விசயத்த கையில எடுத்திருக்கினம்.

ஆனால் பாருங்கோ இப்ப கூட்டமைப்பின்ர கதிரையள பிடிச்சுக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் ஆயுதக் கலாசாரக் காறர் செய்த தியாகங்களால தான் திரும்பவும் பாராளுமன்றக் கதிரைக்கு வந்தவையள் எண்டத மறந்திட்டினம் போல.


ஆனால் பாருங்கோ, ஆயுதக் கலாசாரத்த வெறுக்கிறம், ஆயுதக் கலாசாரத்தோட நிண்டவைய வெறுக்கிறம் எண்டு இவையள் சொல்லுறது, கட்சிக்குள்ள இருக்கிற ஒருசிலர மட்டும் சொல்லுறதா அவையள் நினைக்கலாம். ஆனால் பாருங்கோ எங்கட இனத்த உலகம் திரும்பிப் பாக்க வைக்கிற அளவுக்கு நாங்கள் வந்து நிக்கிறம் எண்டால் ஆயுதக் கலாசாரக்காரர் குடுத்த உயிர்விலையள் தான் எண்டத ஆரும் மறுக்கேலாது பாருங்கோ.

ஆயுதக் கலாசாரக்காரர் அலுவல் எல்லாம் முடிஞ்சுது எண்டு நினைச்சுக் கொண்டு இவையள் வேட்டியள தூக்கிக் கட்டிறதுக்கு நிக்கினம். ஆயுதக் கலாசாரக் காரர் நிழலில் நிண்டு இழைப்பாறின கொஞ்சப் பேர் இன்னும் உயிரோட இருக்கினம் எண்ட விசயத்த இவையள் மறந்திட்டினமோ மறந்தது போல நடிக்கினமோ எண்டது தான் புரியேல்ல கண்டியளோ?

- நன்றி : "சரிதம்" இணையத்தளம்

# தொங்குபாலம் அறுந்து வீழ்ந்தது 50பேர் நீரில் மூழ்கி மரணம்

## ஒருவாரத்தில் இரண்டாவது பரிதாபம்




(புதுடில்லி)

அருணாசல பிரதேசத்தில் ஒரு தொங்கு கயிறுப் பாலம் அறுந்து விழுந்ததில் 50பேர் கொல்லப்பட்டனர், பலர் ஆற்றில் மூழ்கியதால் அவர்களது உடல்களை தேடும் பணி மீட்புப் படையினரால் துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

மேற்கு காமங் மாவட்டத்தில் உள்ள காமங் ஆற்றுப்பகுதியின் மேல் ஒரு பழமையான கயிறு பாலம் உள்ளது. இந்த வழியாக 60 முதல் 70பேர் வரை மொத்தமாக சென்றுகொண்டிருந்தனர். இதில் குறிப்பாக பலரும் இளம் வயதினர் மற்றும் மாணவ, மாணவிகள் அடங்குவர். பாரம் தாங்காத இந்தப் பாலம் அறுந்து விழுந்தது. இதில் அனைவரும் மொத்தமாக ஆற்றுக்குள் விழுந்தனர். ஆற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியதால் பலரும் தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட்டனர். அருகில் இருந்த மலைவாழ் மக்கள் சிலரை காப்பாற்ற முயற்சித்தனர். இதில் 30 பேர் பிணமாக மீட்கப்பட்டனர். பலரது உடல்கள் தேடும் பணி நடந்து வருகிறது.

இம்மாவட்ட பொலிஸ் அதிகாரி விபத்துக் குறித்து கூறுகையில் 70 மீட்டர் நீளமும், 40 அடி அகலமும் கொண்ட இந்தப் பாலம் செப்பா நகரை இணைக்கிறது. ஒரேநேரத்தில் பலர் சென்றதால் பாலம் அறுந்து விழுந்திருக்கிறது. பலரது உடல்கள் தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. 30க்கும் மேற்பட்டோரை காணவில்லை சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது. உள்ளூர் மக்கள் உதவியுடன் மத்திய பொலிஸ் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 23ஆம் திகதி டார்ஜீலிங் பகுதியில் மரப்பாலம் அறுந்து விழுந்ததில் 34பேர் பலியாயினர். இம்மாதத்தில் இன்றுடன் 2 பாலம் விழுந்து பலரது உயிரை காவு வாங்கியிருக்கிறது.




# அத்வானியின் ரத யாத்திரைக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)



பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் அத்வானியின் ரத யாத்திரை பெங்களூருக்கும், மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் வரும் போது, கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என, கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர் பரமேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கர்நாடக மாநில பா.ஜ., தலைவர்கள் பலர் ஊழலில் சிக்கியுள்ளனர். இந்நிலையில், ஊழலுக்கு எதிரான அத்வானியின் யாத்திரை, இந்த மாநிலத்திற்கு வருவது வியப்பளிக்கிறது. யாத்திரையின் அமைப்பாளரான கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அனந்தகுமாரும், ஊழல் குற்றச்சாட்டை சந்தித்து வருகிறார். ஊழலுக்கு எதிராக போராட்டம் நடத்த பா.ஜ., கட்சிக்கு தார்மீக ரீதியான எந்த உரிமையும் இல்லை, என்றார்.

தமிழகத்தில் அத்வானியின் ரத யாத்திரை செல்லும் பாதையில், வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, கோவாவில், அவரின் யாத்திரைக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# வை.கோ இன்னும் திருந்த வில்லை

(புதுடில்லி)



ஜெயலலிதாவும், கருணாநிதியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல என்று கூறியிருப்பதன் மூலம் ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோ இன்னமும் திருந்தவில்லை என்று முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தமிழக அமைச்சரவை மூன்று பேரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக்கோரி தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று தி.மு.க ஆட்சியில் கடைப்பிடித்த முறையைச் செய்தியாளர்களிடம் வை.கோ கூறியுள்ளார். நான் அப்போது செய்ததையும்,இப்போது சொன்னதையும் அவர் நினைவூட்டிய போதிலும் என்னையும், ஜெயலலிதாவையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று கூறி ஆத்திரத்தைக் கக்கியிருக்கிறார் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

தி.மு.கவுக்கு ஆற்றிய பணிக்காக மூன்று முறை மாநிலங்களவை உறுப்பினராக்கி அருகிலேயே வைத்திருந்து பாராட்டிய நானும், கடைசி நிமிடம் வரை காத்திருக்க வைத்து கைவிட்ட ஜெயலலிதாவும் வை.கோவுக்கு ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகத் தெரிகிறார்கள் என்றால் அவர் இன்னமும் திருந்தவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. பூனை இளைத்தால் எலி கூட மச்சான் முறை கொண்டாடும் என்பது பழமொழி என்று கருணாநிதி கூறியுள்ளார்.

# அணுசக்தி மற்றும் வர்த்தகம் குறித்து இந்தியா - ஜப்பான் பேச்சுவார்த்தை



(புதுடில்லி)

அணுசக்தியை ஆக்க பூர்வமான பணிகளில் பயன்படுதது வது தொடர்பாக ஜப்பானுடன் இந்தியா பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது. அணுசக்தி ஒத்துழைப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயறபடுவது தொடர்பாக ஜப்பானுடன் பேச்சு நடத்த மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா டோக்கியோ சென்றுள்ளார்.

அங்கு ஜப்பான் வெளியுறவு அமைச்சர் கோசிரோ கெம்பாவுடன் ஆலோசனை நடத்தினார். முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய கிருஷ்ணா, இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயறபடுவதன் மூலம் மிகுதியான பலன்கள் கிடைக்கும். மொத்தம் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தையில் பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட உள்ளன என்றார்.

மேலும் அவர் கூறியதாவது, தற்பொழுது 7 இந்திய நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை ஜப்பான் நீக்கியுள்ளது. 7 நிறுவனங்களில் இந்தியன் ரேர் எர்த் லிமிடெட் நிறுவனமும் ஒன்றாகும். இந்தத் தடை விலக்கல் மூலம் இந்திய, ஜப்பானிய நிறுவனங்களிடையே ஒத்துழைப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது என்றார்.

இந்தியாவில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஜப்பானின் ஒத்துழைப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. அடுத்தகட்டமாக புல்லட் ரயில் தொழில்நுட்பத்தை அளிக்கவும் ஜப்பான் தயாராக இருப்பதாக ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் கெம்பா குறிப்பிட்டார். இது தொடர்பாக ஜப்பானிய நிறுவனங்கள் இந்திய அரசு அல்லது இத்திட்டத்தை நிறைவேற்ற முன்வரும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக உள்ளது என்றார்.

# இரண்டரை இலட்சம் விவசாயிகள் 16 ஆண்டுகளில் தற்கொலை

(சென்னை)

இந்தியாவில் கடந்த 16 ஆண்டுகளில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 1995ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இந்த தற்கொலைகள் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கள் மற்றும் தற்கொலைகள் தொடர்பாக 15 ஆயிரத்து 964 சம்பவங்கள் கடந்த ஆண்டு பதிவாகியுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் காலப் பகுதியில் மிகவும் செழிப்பான மாநிலமாகக் கருதப்பட்ட மஹாராஸ்ராவில் 50 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கர்நாடகா, ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், மற்றும் சதீஸ்கர் மாநிலங்களிலும் அதிகளவு விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக புள்ளி விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# இயந்திரம் மூலம் திருப்பதி லட்டு

(புதுடில்லி)

வங்கி ஏ.டி.எம்., மையங்களில் வாடிக்கையாளர்கள் பணம் எடுப்பது போல், கைரேகைப் பதிவு செய்த பின், தானியங்கி இயந்திரங்கள் மூலம் பக்தர்கள் லட்டு பிரசாதம் பெற்றுக் கொள்ளும் புதிய திட்டத்தை செயற்படுத்த, திருப்பதி தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது. இதற்கான இயந்திரங்கள், விரைவில் பெங்களூரிலிருந்து திருமலைக்கு கொண்டு வரப்படும் என, தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்தனர்.திருப்பதி, திருமலையில் தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு ஆர்ஜித சேவா டிக்கெட் ஒன்றுக்கு இரண்டு லட்டுகள், வி.ஐ.பி., தரிசனம், 300 ரூபாய் சிறப்பு நுழைவு தரிசனம், 50 ரூபாய் சிறப்புத் தரிசனம், பாத யாத்திரை வரும் பக்தர்களுக்கும், ஒரே மாதிரியாக இந்த டிக்கெட்களின் மீது,இரண்டு லட்டுகள் வழங்கப் படுகின்றன. இலவச தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்களுக்கு, மானிய விலையில், 20 ரூபாய்க்கு, இரண்டு லட்டுகள் வழங்கப்படுகின்றன.

கூடுதலாக லட்டு தேவைப்பட்டால், ஒரு பக்தருக்கு, 4 லட்டுகள் வீதம் ஒரு லட்டு, 25 ரூபாய் விலையில், லட்டு விற்பனை கவுண்டர்கள் மூலம் விற்கப்படுகின்றன. ஒரு லட்டின் எடை 175 கிராம் இருக்க வேண்டும். பக்தர்கள் லட்டு எடையை



சரிபார்த்துக் கொள்ள, கவுண்டர்கள் அருகே எடை இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

லட்டு விநியோக முறைகேடுகளைத் தடுக்க, நவீன தொழில் நுட்பத்தை உபயோகித்து, இயந்திரம் மூலம் லட்டு வழங்க, தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது. இதையடுத்து, காகிதத்தில் வழங்கப் படும்,டோக்கன் முறையை நிறுத்தி விட்டு, வலது கை ஆள்காட்டி விரல் ரேகையை பதிவு செய்து, பக்தர்களின் உருவப் படத்துடன் பதிவு செய்ய இயந்திரம் நிறுவப்படும். கைரேகைப் பதிவு செய்யப் படும் இந்த இடத்தில், பக்தர்கள் லட்டுக்கான தொகையை செலுத்த வேண்டும்.

# கூடங்குள விவகாரம் நிபுணர் குழு ஆலோசனை

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரம் தொடர்பாக மத்திய அரசு நியமித்துள்ள நிபுணர் குழு,நேற்றுமுன்தினம் முதல் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது. கூடங்குளம் அணுமின் திட்டத்தை முற்றிலும் கைவிட வலியுறுத்தி அப்பகுதி மக்கள் தொடர்ந்து 12ஆவது நாளாகப் போராட்டம் நடத்தி வருகின்ற நிலையில் அங்கு பணிகள் முடங்கியுள்ளன.

இந்த நிலையில் மக்களிடையே அணு மின் நிலையம் குறித்த அச்சத்தைப் போக்குவதற்காக,15 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இந்தக் குழுவில் தமிழக அரசின் சார்பில் யாரும் நியமிக்கப்படவில்லை.

ஆனால் நேற்றுமுன்தினம் சென்னையில் மத்திய அரசு நியமித்துள்ள நிபுணர் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் இந்திய அணு சக்திக் கழக தலைவர் சிறிகுமார் பானர்ஜி, இந்திய அணு மின் கழக நிறுவனத் தலைவர் எஸ்.கே.ஜெயின் உடபட இந்திய அணு சக்தித்துறை அதிகாரிகளும் பங்கேற்றனர். இந்த ஆலோசனையின் போது கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக இந்திய அணு சக்தித் துறையின் நிலைப்பாடு, போராட்டக்காரர்களின் நிலைப்பாடு உள்ளிட்ட தகவல்களை மத்திய நிபுணர் குழுவிடம் அதிகாரிகள் அளித்ததாகத் தெரிகிறது. இந்தக் குழு மீண்டும் வரும் 7ஆம் திகதி கூடி ஆலோசனை நடத்த உள்ளது.

உலகச் செய்திகள்

# ரஷ்யாவின் எல்லையோரப் பகுதிகளில் சீனர்கள் சட்ட விரோதக் குடியேற்றம்



ரஷ்யாவின் எல்லைப் பகுதிகளில் குடியேற்றங்கள் அமைக்க சீன அரசு தூண்டி வருகிறது.இதுகுறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைப்பு (எப்.எஸ்.பி) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சீனா தன் குடிமக்களை ரஷ்ய எல்லைப் புறங்களில் நுழைந்து குடியேற்றங்களை அமைக்கத் தூண்டி வருகிறது.

இதற்காக பல சீன நிறுவனங்கள் ரஷ்யாவின் ஓட்டுனர் உரிமங்களை போலியாகத் தயாரித்து இணையத்தளத்தில் வெளிப்படையாக விற்று வருகின்றன. இதை சீன அரசு கண்டும் காணாமல் அனுமதித்து வருகிறது.

ரஷ்யாவில் இருந்து சீனாவுக்கு மரங்கள் கடத்தப்படும் போது இந்த போலி ரஷ்ய ஓட்டுனர் உரிமங்களே பயன்படுத்தப்படுகின்றன. இதுபோல போலி ரஷ்ய உரிமங்களைப் பயன்படுத்தும் சீனர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்.இதற்கு முன்பு வந்த ஆய்வறிக்கைகளின்படி இலட்சக்கணக்கான சீனர்கள் சட்டவிரோதமாக ரஷ்ய எல்லைக்குள் ஊடுருவி குடியேற்றங்களை அமைத்துள்ளனர். அவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட எந்த ஒரு அரசு அமைப்பும் அமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### - துப்பாக்கிச் சூட்டில் 44 பொதுமக்கள் பலி -

# சிரியாவில் வன்முறைகளை நிறுத்த அரபு லீக் கூட்டமைப்பு அழைப்பு

சிரியாவில் நடந்த மக்கள் பேரணிகளின் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டனர்.இதையடுத்து மக்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களை கைவிடும்படி அரபு லீக் சிரியாவுக்கு அவசரச் செய்தி அனுப்பியுள்ளது.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டங்கள் எட்டாவது மாதமாகத் தொடரும் நிலையில் நேற்று முன்தினம் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட பேரணிகள் நடந்தன. லிபியாவில் அப்போதைய தலைவர் கடாபியின் இராணுவ வன்முறையைத் தடுக்கும் வகையில் ஐ.நா அந்நாட்டின் மீது 'போர் விமானங்கள் பறக்கத் தடை' விதித்ததைப் போல சிரியாவிலும் விதிக்க வேண்டும் என்பது தான் மக்கள் பேரணிகளின் நோக்கம் என சிரியாப் புரட்சி 2011 என்ற பேஸ்புக் தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

லிபியாவைப் போல அதிபர் அசாத் போர் விமானங்களைப் பயன்படுத்தாததால் இந்தக் கோரிக்கையின் பலன் குறைவாகவே இருக்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் முக்கிய நகரங்களான ஹமா மற்றும் ஹோம்சில் மசூதிகளில் தொழுகைக்குப் பின் பேரணிக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. சிரியா இராணுவம் மசூதிகளை முற்றுகையிட்டு மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 44 பேர் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து வீடு வீடாக நடந்த சோதனையில் பலர் கைது செய்யப்பட்டனர். ஹமாவில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று பொலிஸார் மீது நடத்திய தாக்குதலில் சிலர் காயம் அடைந்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஆப்கானில் அமைதி திரும்ப பேச்சு வார்த்தை நடத்தத் தயார்


### - ஹிலாரி கிளிண்டன் அறிவிப்பு

(வொஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் நடவடிக்கை குறித்து அந்நாட்டு பாராளுமன்றத்தில் 138 பக்க அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்பவேண்டும். அதற்காக தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் முல்லா ஒமருடன் பேச்சு வார்த்தை நடத்தது தயாராக இருக்கிறோம்"" என்றார். இது குறித்து, ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் செய்தித் தொடர்பாளர் ஹபியுல்லா முஜாகிதினிடம் கருத்து வெளியிட்டபோது


ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்கா இரட்டை வேடம் போடுகிறது. 2 விதமான கொள்கைகளைக் கொண்டுள்ளது. ஒரு கையில், பேச்சு



வார்த்தை என்ற வாதத்தையும், மறு கையில் அங்கு தனது இராணுவத் தளம் அமைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது. அதன் இரட்டைக் கொள்கையினால் பேச்சுவார்த்தை நடத்தியும் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை என்றார்.

# நேட்டோ படையினரின் பேருந்து மீது ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்

### - 14பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான் படையினர் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.நேட்டோ படையினர் பயணம் செய்த பேருந்து மீது காரில் வந்த தலிபான் தீவிரவாதி மோதி வெடிக்கச் செய்ததில் நேட்டோ படையினர் 11 பேர் உட்பட 14 பேர் உயிரிழந்தனர்.

அதே நேரத்தில் நகரத்தின் மேற்குப் பகுதியான அஸாதாபாதின் குணார் மாகாணத்தில் மற்றொரு தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்தது. ஆப்கானிஸ்தான் உளவு அலுவலகத்துக்கு வெளியே பெண் மனித வெடிகுண்டு நடத்திய இத்தாக்குதலில் இருவர் காயமடைந்தனர். காந்தகார் நகரில் அமெரிக்கா நடத்தி வரும் பொது மக்கள் இராணுவ முகாம்கள் மீது தலிபான்கள் நான்கு மணி நேரம் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

2014ம் ஆண்டுக்குள் நேட்டோ படை முழுவதுமாக ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிவிடுவார்கள் என்று கடந்த வாரத்தில் ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமித் கர்சாய் கூறியிருந்தார். இந்நிலையில் இத்தாக்குதல் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

சிங்கப்பூரில் உள்ள ஸ்ரீ செண்பக விநாகயர் ஆலயத்திற்கு நிர்வாகி தேவை 30-60 வயதுடைய, தமிழ் - ஆங்கில மொழிகளில் இந்து சமய அறிவாற்றல் உள்ள கணினி மயப்படுத்தப்பட்ட கணக்குகளை கையாளத்தெரிந்த, பொறுமையான குணமுடையவர் தகுதியானவர் தேவை. தகுதியுடைவர்கள் nara @meenara.com இற்கு விண்ணப்பிக்கவும். தொலைபேசி 6597539583.

யாழ்ப்பாணத்தில் பணியாற்ற கைத்தொலைபேசி தொழில்நுட்ப வியலாளர்கள் தேவை. 30 வயதிற்கு உட்பட்ட, கைத்தொலைபேசி சீர்திருத்த உபகரணங்களை கையாள்வதில் ஒரு வருட அனுபவமுள்ள தொழில்நுட்பவியலாளர்கள் உறவினர் அல்லாத இரண்டு பரிந்துரைகளுடன் 6 தினங்களுக்குள் HR Department Office Automation (Pvt) Ltd.498 Galle Road,Col - 03 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

நோயாளிகளை வீட்டில் சென்று பராமரிப்பதற்கு பயிற்றப்பட்ட பயிற்றப்படாத பெண் தாதியர்கள், attendant தேவை வயது 20-45 க.பொ.த.சாதாரண சித்தி உடையவர்கள் விண்ணப்பிக்கவும் தங்குமிடம் இலவசம் ஆர்வமுள்ளவர்கள் visicare Home Narsing, No 22/4 Nelson Place,wellawatha - col-06. 0714405308, 0755980708 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்.நகரில் தொடங்கவிருக்கும் கணினி விற்பனை நிலையத்திற்கு அலுவலக பணியாளர் (பெண்கள்) சந்தைப்படுத்தல் அலுவலர்கள் (ஆண்கள்) தேவை ஆற்றுலும் ஆர்வமும் உடையவர்கள் 077 0555855 அல்லது antony uthayakumar @gmail.com இற்கு தொடர்பு கொள்ளவும்.

அலுவலக வேலைக்கு ரைப் செற்றிச் செய்யக்கூடிய Clerk தேவை ஆர்வமுள்ளவர்கள் திசைகாட்டி முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம் 37 சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி யாழ்ப்பாணம் 021 4914527,0212219016 இற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சியுள்ள தமிழ்,ஆங்கில மொழி பெயர்ப்பு,அறிக்கைகள்,திட்டமுன்மொழிவுகளை ஆங்கிலத்தில் எழுதக்கூடிய கணினியை கையாளத்தெரிந்தவர் வேலைக்கு தேவை. ஆற்றலும் ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையை விண்ணப்பத்துடன் இணைத்து Senthurajah@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

யாழ்ப்பாணத்தையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டட மேற்பார்வையாளர்கள் தேவை. NCT,NDT நிறைவு செய்தவர்கள் சுயவிபரக்கோவை பொது முகாமையாளர் திரு.தயா லியனகே Vajira House, No - 4, Vijira Road,Col-04 இற்கு அனுப்பி வைக்கவும்.

பிரபல தமிழ்ப் பத்திரிகை நிறுவனத்திற்கு புகைப்படப் பிடிப்பாளர்/புகைப்பட இதழியலாளர் தேவை 25-40 வயதிற்கு உட்பட்ட ஆற்றலும் ஆர்வமும் உடையவர்கள் Guman Resources Department, PoBox 160 Colombo என்ற முகவரிக்கு எதிர்வரும் 9 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

கொழும்பில் இயங்கும் பிரபல தமிழ்ப் பத்திரிகை நிறுவனத்திற்கு பொது உதவியாளர்கள், இயந்திர இயக்குனர்கள், இயந்திர உதவியாளர்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிட வசதி உண்டு ஆர்வமுள்ளவர்கள் மனிதவள பகுதி த.பெ.இல 160 கொழும்பு என்ற முகவரிக்கு எதிர்வரும் 6 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

ஆண்-பெண் இருபாலாருக்கும் company வேலை வாய்ப்புக்கள் 18-55 வயதிற்குட்பட்ட அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் 16000-38000 வரை ஆர்வமுள்ளவர்கள் 0115 219209, 037 5645006 இற்கு தொடர்பு கொள்ளவும்.

தெஹிவளையில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய ஆண்/பெண் பணியாளர்கள் உடனடியாகத் தேவை ஆர்வமுள்ளவர்கள் 107/2A,ரேப்பல் பிளேனஸ் குவாரி றோட், தெஹிவளை, 0773635268இற்கு தொடர்பு கொள்ளவும்.

அனுபவமுள்ள மேசன். உதவியாளர்கள்.ரைல் பாஸ்மார் கட்டடத்தொழில் தெரிந்த மேற்பார்வையாளர்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 0772797212,0777 198649 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கொழும்பு - 13இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிக்கு Cashier (ஆண்/பெண்) சமையலறை உதவியாளர் மற்றும் Delivery Boys தேவை ஆர்வமுள்ளவர்கள் 0771605090 இற்கு தொடர்பு கொள்ளவும்.

MGM Componyக்கு TATA வாகனம் செலுத்துவதற்கு ஆர்வமுள்ளவர்கள் MGM STORES, NO 777 K.K.S வீதி, யாழ்பப்ாணம், எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

பிளாஸ்டிக் மெஷின் இயக்குபவர்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புவர்கள் தங்குமிடம், உணவு வழங்கப்படும் ஆர்வமுள்ளவர்கள் 7/3 , நீர்கொழும்பு வீதி, ஒலிய முல்லை, வத்தளை அல்லது 0112934912 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வவுனியா நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசாங்க கட்டட வேலைக்கு அனுபவம் வாய்ந்த கட்டட மேற்பார்வையாளர் தேவை NDT (civil),Nct (civil) தகுதியுடையவர்கள் 0712346798 இற்கு தொடர்பு கொள்ளவும்

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்புக்கள் அரசை எந்த வகையிலும் பாதிக்காது

## - ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

வெளிநாடுகளிலும் சரி ஐக்கிய நாடுகள் சபையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சரி யாரைவேண்டுமானாலும் சந்திக்கட்டும் இச்சந்திப்புக்கள் அரசின் செயற்பாடுகளைப்பாதிக்கப் போவதில்லை என்று ஐக்கியநாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் மற்றும் ஐ.நா. செயலரை கூட்டமைப்பினர் சந்திப்பது குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். கூட்டமைப்பினரின் அமெரிக்கப் பயணம் தொடர்பில் அரசு அலட்டிக்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனைச் சந்திப்பதற்கான எந்த வாய்ப்புக்களுமில்லை. ஐக்கிய நாடுகள் சபை வரை அவர்கள் செல்லக்கூடும். ஆனால் ஐ.நா. செயலரைச் சந்திக்கமாட்டார்கள். எங்களுக்குத் தெரியாமல் அவர்களின் சந்திப்பு இடம் பெற அறவே வாய்ப்பு இல்லை இவ்வாறு திட்டவட்டமாகக் கூறினார் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா. செயலரைச் சந்திக்கமாட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஐ.நாவில் அவர்கள் செயலாளர் நாயகத்தை சந்திப்பதாக இருந்தால் அது தொடர்பான தகவல் எமக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அப்படி எந்தத் தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை.நாடாளுமன்றத்தைப் பார்க்க செல்லும் ஒருவர் நாடாளுமன்றத்தை வேண்டுமானால் பார்த்து விட்டு வரலாம். ஆனால் சபாநாயகரை பார்த்தேன் என்று சொல்ல முடியுமா? அதுபோல, கூட்டமைப்பினர் ஐ.நாவின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துபேசக் கூடும். ஆனால் செயலாளரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் கிடையாது.இன்னொன்றையும் கூறவிரும்புகின்றேன். தமிழக் கூட்டமைப்பினர் எவரைச் சந்தித்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை. ஐ.நாவில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு இலங்கை. எனவே இப்படியான கட்சிகளின் செயற்பாடுகள் அல்லது முயற்சிகள் எந்த விதத்திலும் எம்மைப் பாதிக்கப் போவதில்லை. இவ்வாறு தெரிவித்தார் சவேந்திர சில்வா

# பொன்சேகாவுக்கு நியாயம் வேண்டும்

## பாப்பரசரிடம் மகஜர்



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி, பாப்பரசரிடம் பதினாறாம் பெனடிக் ஆண்டகையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலின் பிரகாரம், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன வத்திக்கானில் வைத்து இது தொடர்பான விசேட மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்படுவதற்கு சரத் பொன்சேகா முன்னின்று செயற்பட்டார் எனவும், படைத் தளபதியாக அவர் கடமையாற்றியதாகவும் ஜயலத் ஜயவர்தன, போப்பாண்டவரிடம் எடுத்துக் கூறியுள்ளார். சரத் பொன்சேகாவின் தலைமையில் யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டு பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் அவருக்கு அநீதி இழைக்கப்படுவது பெரும் அநியாயம் என்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வினைத்திறனுடன் மனித வளப் பயன்பாடு புதிய கொள்கை வகுக்கிறது அரசு



(கொழும்பு)

மனித வளத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தும் வகையிலான புதிய கொள்கை ஒன்றை வகுத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மனித வளம் தொடர்பிலான சிரேஷ்ட அமைச்சர் டி.யு குணசேகரவின் தலைமையில் அந்தக் கொள்கைளை தயாரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மஹிந்த மடியஹேவா குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக சர்வதேச தொழிலாளர்கள் ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

முதலீட்டு வலயங்களிலும் நீர்பாசனத் துறையிலும் அதிகளவில் தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் சம்பளக்குறைவு மற்றும் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என்ற அச்சம் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் காரணமாக அது குறித்து இளைஞர் யுவதிகளின் ஆர்வம் குறைந்துள்ளதாகவும் மனித வளம் சிரேஷ்ட அமைச்சின் செயலாளர் கூறினார்.

முதலீட்டு வலயங்களில் 25 ஆயிரம் தொழில்வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் நீர்பாசனத்துறையில் சுமார் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.எனவே புதிய கொள்கை மூலம் அவ்வாறான பல்வேறு பிரச்சினைகளை தீர்த்து இளைஞர் யுவதிகளை ஊக்குவிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பொது நலவாய மாநாடு இலங்கைக்கு பெரும் வெற்றி

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பெருமிதம்



பொதுநலவாய மாநாடு இலங்கைக்கு முழுமையான வெற்றியைத்தந்துள்ளது. என்றும் இலங்கை தொடர்பான யதார்த்தமானதும் தெளிவானதுமான விளக்கத்தை சர்வதேச சமூகத்துக்கு தெளிவு படுத்துவதற்கு இந்த மாநாடு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்ததாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவின் பேத் நகரில் இடம் பெற்றுவரும்,பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர் மாநாட்டில் பங்கு கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல அரச தலைவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.இதனிடையே, பங்களாதேஷ் சிங்கப்பூர், பாக்கிஸ்தான் மற்றும் மலேசியப் பிரதமர்களைச் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து விரிவாக உரையாடியதாக ஜீ.எல். பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

இது தவிர, பொதுநலவாய நாடுகளின செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவுடனான விசேட சந்திப்பொன்றிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.எதிர்வரும் 2013ஆம் ஆண்டு இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு பங்களாதேஷ் முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்கும் என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஜனாதிபதிக்கு உறுதி அளித்துள்ளார்.

அதேபோல சிங்கப்பூர் பிரதமர், இலங்கையுடனான வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த உறுதியளித்துள்ளார்.இதனிடையே, ஆபிரிக்க நாடுகள் பலவற்றுடனும், புதிய இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# நாடு முழுவதும் புற்று நோய் வேகமாக அதிகரிக்கிறது

(கொழும்பு)

நாடுமுழுவதும் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துவருகிறது. கடந்தவருடத்தை விடவும் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

இதனால் மஹறகம தேசிய புற்று நோய் நிலையத்தில் சிகிச்சைக்காக வரும் புற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் பாரிய அளவில் அதிகரித்து வருவதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, வருடாந்தம் 18 ஆயிரத்திற்கும் அதிகமான புதிய புற்று நோயாளர்கள் சிகிச்சைக்காக வருவதாக மருத்துவ தரப்பினர், தெரிவித்துள்ளனர்.இவர்களில், 72 சதவீதமானவர்கள் புகைத்தல் காரணமாக நுரையீரல் புற்று நோய்க்கான சிகிச்சைக்காக வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வருடாந்தம் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் புகைத்தல் காரணமான நோய்கள் மூலம் மரணிப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

# சிறுவர் அபிவிருத்தியை மேம்படுத்த நலிவுற்ற பெற்றோருக்கு நிதியுதவி

(கொழும்பு)

சிறுவர் இல்லங்களில் தமது பிள்ளைகளை இணைக்கும் வருமானம் குறைந்த பெற்றோர்களுக்கு நிதிஉதவி வழங்க அரசு புதிய செயற்திட்டங்களை உருவாக்கியுள்ளது.

பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போது, பிள்ளைகளை சிறுவர் இல்லங்களில் ஒப்படைப்பது தொடர்பில் ஆராய தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்தார்.பெற்றோர் அல்லது பாதுகாவலர் பொருளாதார நெருக்கடி காரணமாக தமது பிள்ளைகளை சிறுவர் இல்லங்களில் ஒப்படைப்பதாக தெரியவந்துள்ளது.

இதனால் இந்த நிலையைப் போக்கும் நோக்கில் அவ்வாறானவர்களுக்கு நிதி உதவிகளை வழங்கவும் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதன் மூலம் சிறுவர் இல்லங்களில் சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதை தடுத்து நிறுத்த முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.



தியத்தலாவையில் அமைந்துள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் டிப்ளோமா பாடநெறியினை நிறைவுசெய்த 57 இராணுவ அதிகாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இதன்போது பாடநெறியை நிறைவுசெய்த அதிகாரிகளுக்கு இராணுவத் தளபதி சான்றிதழ்களையும் கேடயங்களையும் வழங்கி வைத்தார்.

# பிரச்சினைகளுக்கு அழுத்தம் கொடுக்க புதிய அமைப்பொன்று உருவாக்கம்

(கொழும்பு)

மனித நேயத்திற்கான மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் என்ற பெயரில் மக்கள் நலன் சார்ந்த சமூக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை இந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசசார்பற்ற இணையங்களின் நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது வருகை தந்திருந்த அனைவரது ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க மேற்படி அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இவ் அமைப்பின் இணைப்பாளராக அரசசார்பற்ற இணையங்களின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், செயலாளராக பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் சு.தவபாலசிங்கம், செயற்குழு உறுப்பினர்களாக சர்வதேச இந்து குருமார் ஒன்றிய தலைவர் வணகத்துக்குரிய சபா.வாசுதேவக் குருக்கள், கிறிஸ்தவ மதகுரு வணக்கத்துக்குரிய பிதா.ரவிச்சந்திரன், இஸ்லாமிய மௌலவி. எம்.எ.பைசர் (மதனி), கொட்போடை மீனவர் சங்க தலைவர் காண்டீபன், வட இலங்கை பத்திரிகையாளர் சங்க செயலாளர், சனசமூக நிலையங்களின் செயலாளர் பொன்.கனகரத்தினம், மக்கள் சக்தி அமைப்பின் உபதலைவர் அரியகுட்டி இந்திரராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ் அமைப்பிலே எதிர்வரும் காலங்களில் தமிழ் பேசுகின்ற மககள் வாழ்கின்ற எல்லா இடங்களிலும் அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவதுடன் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதோடு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிய அழுத்தங்களினை வழங்கி அப்பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதே இவ் அமைப்பின் நோக்கமாகும் என அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# தனியார் பஸ் கட்டணங்கள் விரைவில் அதிகரிப்பு

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டதனையடுத்து பஸ் கட்டணங்களும அதிகரிக்கப்படவுள்ளன. இது தொடர்பில் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கம் தெரிவிக்கையில், டீசல் விலையில் தற்போது அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதன் காரணமாக தனியார் பஸ் கட்டணத்திலும் உடனடி அதிகரிப்புச் செய்யவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. நாளைய தினம் இது தொடர்பில் முடிவெடுக்கப்படும் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

# சில்ப – 2011 கண்காட்சி நிகழ்வில் 64 நாடுகளின் பிரதிநிதிகள்



சில்ப - 2011 இன் இறுதிநாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக 64 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்க்ள் மறறும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களான அல்ஹாஜ் ஏ.எச்.எம் அஸ்வர் திலங்க சுமதிபால ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்புச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச்சபை, பனை அபிவிருத்திச் சபை மற்றும வடகடல் நிறுவனம் ஆகியவற் றின் பங்களிப்புக்களுடன் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் சிறீமாவோ பண்டாரநாயக்க கண்காட்சிக் கூடத்தில் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பித்து வைககப்பட்ட சில்ப - 2011 கண்காட்சியும் விற்பனையும் நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு நேற்று வைபவ ரீதியாக இடம் பெற்றது.

இலங்கைக்கு வருகின்ற உல்லாசப் பிரயாணிகளால் தமது பிரயாணத்தின் ஞாபமாக ஊள்ளூர் கைவினைப் பொருட்களை வாங்கிச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடிப்படை வசதிகள் இன்றி இயங்கும் விடத்தல்தீவு கிராமிய சுகாதார நிலையம்

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற குட்பட்ட விடத்தல்த் தீவு கிராமிய சுகாதார நிலையம் இதுவரையில் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கிவருவதாக மாந்தை மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர் ஜேம்ஸ் சுதாகரன் தெரிவித்தார்.

தற்போது 6 சுகாதார பணியாளர்களும் 2 தொண்டர்களும் அடஙகளாக 8 பணியாளர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர். குறித்த வைத்தியசாலையில் எவ்வித அடிப்படை வசதிகளும் இது வரையில் செய்து கொடுக்கபடவில்லை. குறிப்பாக கர்ப்பிணி தாய்மார்களை சாதாரணமான முறையில் பரிசோதனை செய்யக் கூடிய வகையில் கூட எந்தவித வசதிகளும் இல்லையெனவும் அவர் கூறினார்.

அது மாத்திரமின்றிகுடிநீர் வசதிமலசல கூடம் ஆகிய வசதிகள்கூட விடத்தல்த்தீவு கிராமிய சுகாதார நிலையத்தில் இல்லையெனவும் தெரிவித்த அவர், மேற்படி குறைபாடுகள் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு எதிரான...

இலங்கை விவகாரம் குறித்து கனடா கேள்வி எழுப்ப திட்டமிட்டிருந்தபோதிலும், அது முறியடிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டமைப்புடனான...

நிலைச் செயலர் வெட்டி சேர்மன் ஆகியோரை கூட்டமைப்பு பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர். மேலும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த கொள்கை வகுப்பு அதிகாரிகளுடனும் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்புகளின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 பக்க ஆவணம் ஒன்றைக் கையளித்துள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க குற்றங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய இந்த ஆவணத்தை கருத்தில்கொண்டு அரசின் மீது அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் கேட்டுககொண்டுள்ளதாகவும் கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கூட்டமைப்பின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பதற்கான சாத்தியங்கள் பற்றியும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையே அரசாங்கத்தினர் முதற்கொண்டு இலங்கையிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் பற்றி பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர். இதில் எதிர்க்கட்சியினர் சிலர் அரசாங்கத்தின் மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இவ்வாறான நிலைமையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அமெரிக்க விஜயம் பற்றி அரசாங்கத்துக்கு உத்தி யோகபூர்வமாக எதுவும் தெரியாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அமெரிக்க விஜயம் அக்கட்சிக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுகளில் ஏதேனும் செல்வாக்குச் செலுத்தக் கூடுமா என அமைச்சரை ஊடகவியலாளர் வினவியபோது இவ்விஜயம் பற்றி நாம் பல்வேறு ஊடகச் செய்திகள் மூலம்தான் தகவல்களை அறிந்துள்ளோமே தவிர, உத்தியோகபூர்வமாக எதுவும் தெரியாது. இந்த நிலையில் அவர்கள் எந்தெந்த விடயங்கள் பற்றி பேசுகின்றனர் என்பது தெரியாத நிலைமையில் அதுபற்றி கருத்து வெளியிட முடியாது. ஏனெனில் இது உணர்ச்சிபூர்வமான விவகாரம். இதற்கும் பேச்சுகளுக்கும் தொடர்பில்லை என்று பதிலளித்தார்.

## மனித உரிமையை...

வேண்டும். இலங்கை விவகாரத்தில் கனடா வெறுமனே வார்த்தைகளினால் கருத்துக்களை வெளியிட்டு அனுமதிகாக்காது. இலங்கை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், ஏற்கனவே இலங்கையில் ஆளும் தரப்பினருக்கு கனடாவின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தீபக் ஒபராய் தெரிவித்துள்ளார். உலக மனித உரிமைகளுக்காக கனடா உரக்கக் குரல் கொடுக்கும் எனவும், குறிப்பாக இலங்கை விவகாரத்தில் கனடா தனியான கரிசனை காட்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் பேசும் மக்களின்...

இருந்தனர். ஆனாலும் அதில் கலந்துகொண்ட சக தமிழ்க் கட்சிகளால் தமிழ் மக்களுக்கான அரசியல தீர்வு விடயத்தில் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வர முடியாமல் போனமை கவலைதரும் விடயமாக இருப்பினும், தமக்கு இது ஆச்சரியமானதொரு விடயம் அல்ல என்றும வெறும் தேர்தலுக்காக மட்டும் கூட்டுச் சேர்ந்திருக்கும் இவர்களால் கடந்த காலங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒருமித்த முடிவிற்கு வர முடியாமல் போன வரலாற்றுத் தவறுகள் உண்டு என்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தரப்பில் எடுத்து விளக்கப் பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்திருந்த திரு சுதர்சன நாச்சியப்பன் தாம் முன்னெடுத்திருந்த புதுடில்லி மாநாடு தமிழ் மக்களுக்கு மறுபடியும் கிடைத்திருந்த அரிய சந்தர்ப்பம் என்றும் ஆனாலும், அதில் கலந்துகொண்ட சக தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைபாட்டை எடுக்கத் தவறியமை துரதிஷ்டவசமானது எனவும் தனது மனத்துயரத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இச்சந்திப்பின் போது வழமைபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் சுயலாப அரசியலுக்காக புதிதாக கிளப்பி விடப்பட்டிருக்கும் காணி உரித்துப் பதிவு குறித்த திட்டமிட்ட புரளிகள் விடயமாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தரப்பில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டதோடு காணி உரித்து பதிவுச் சட்டமானது தமிழ் மக்களுக்கு எதிரானதொரு விடயமாக இருந்திருந்தால் அதை நிச்சயம் எதிர்த்திருப்பதோடு, அது குறித்து அரசாங்கத்தோடு நியாயம் கேட்டு பேசியிருப்போம் என்றும் எடுத்து விளக்கப்பட்டது.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினை, தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கான துரித அபிவிருத்திப் பணிகள், இடம்பெயர்ந்து மீள்க்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதார வசதிகள், மற்றும் இந்திய அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும வீடமைப்புத்திட்டம் என பல்வேறு விடயங்கள் குறித்தும் மேலும் ஆற்றப்பட வேண்டிய பணிகள் மற்றும தேவைகள் குறித்தும் ஈ.பி.டி.பி. தரப்பினரால் விரிவாக எடுத்து விளக்கப்பட்டது.

இதன்போது ஈழத்தமிழர்களின் துயர்களை துடைப்பதற்கு தாம் ஒருபோதும் பின்நிற் கப்போவதில்லை என்று சுதர்சன் நாச்சியப்பனால் அவர்களால் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அடைய முடியாததும், நடைமுறைக்குச் சாத்தியமற்றதுமான வெற்றுக் கோஷங்களால் தமிழ் மக்களே அவலங்களை சந்திக்க வேண்டிய துயரங்கள் இங்கு நிகழ்ந்தன என்பன குறித்த கருத்து பரிமாற்றங்களும், அடைய முடிந்த நடைமுறைககுச் சாத்தியமான வழிமுறையான 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து தொடங்கும் வழிமுறையே சாத்தியமானது எனவும், அதை விரைவாக முன்னெடு[illegible] தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை [illegible]கான ஒரேயொரு வழிமுறை என்றும் இச்ச[illegible]து பரஸ்பரம் இணக்கம் காணப்பட்டது.

இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாகிய சுதர்சன நாச்சியப்பன் அவர்களுடனான இச்சந்திப்பின் போது ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, கட்சியின் முக்கியஸ்தர்களான கே.தயானந்தா, றொபின் ராஜ்குமார் மற்றும் தயாழினி ஆகியோரும கலந்து கொண்டனர்.

## 2013 பொதுநலவாய...

அவுஸ்ரேலியப் பிரதமர் ஜூலியா கிளார்ட் தலைமையில் நடைபெற்றது. ஏனைய நாடுகளின் அரச தலைவர்களுக்கு 23 ஆவது அரச தலைவர்கள் மாநாட்டிற்கான அழைப்பு விடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜூலியா கிளார்ட் இதன்போது சந்தர்ப்பம் வழங்கினார். இதற்கமைய இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் 23 ஆவது அரச தலைவர்கள் மாநாட்டிற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்ததுடன் நாட்டின் இயற்கை வளங்கள், உயிர்பல்வகைமை மற்றும் பாரம்பரிய கலாசாரங்கள் தொடர்பில் விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆசியாவின் பழமைவாய்ந்த ஜனநாயக நாடாக இலங்கையை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி உலகில் மிகவும் மோசமான பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுத்த முறைமை தொடர்பில் அரச தலைவர்கள் மாநாட்டில் தெளிவுபடுத்தியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கை 8 வீத பொருளாதார அபிவிருத்தி இலக்கை அண்மித்துள்ளதாகவும் தற்போது மோதல்கள் நிலவிய பகுதிகளில் அபிவிருத்தி வேகம் 22 வீதமாக உயர்வடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

22 வருடங்களின் பின்னர் பொது நலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டினை ஆசியாவில் நடத்துவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி இதற்காகத் தமது நன்றிகளையும் தெரிவித்தார்.

# நீதித்துறையை அடிமைப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம்

## குற்றஞ்சாட்டுகிறார் சரத் என் சில்வா



(கொழும்பு)

அரசாங்கம் நீதித்துறையை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

தன் மீதான விசாரணைக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் எடுத்துள்ள முயற்சி அரசியல் ரீதியான பழிவாங்கல் எனவும் சரத் என்.சில்வா நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிரான விசாரணைகளை நடத்துவதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இன்னும் பல ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 75 பேர் பிரேரணையொன்றின் ஊடாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷவைக் கோரியிருக்கின்றனர்.

முன்னாள் நீதியரசர் அவரது பதவிக்காலத்தில் அதிகாரத் துஷ்பிரயோகத்திலும், தவறான நடத்தைகளிலும் ஈடுபட்டுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்குமாறே ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

நாட்டின் தலைமை நீதியரசராக இருந்த சரத் என் சில்வா, நீதித்துறைக்கு களங்கம் ஏற்படுத்தியிருப்பதாகவும் நீதித்துறைச் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்கத் தவறிவிட்டதாகவும் அந்தப் பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இந்த நிலையில் நேற்று ஊடகங்களுக்குப் பதிலளித்துள்ள சரத் என் சில்வா, கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கு எதிராக குரல் கொடுத்ததாலேயே தன்னை மகிந்த அரசு பழிவாங்கப் பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

தான் முன்னர் வழங்கிய தீர்ப்புகளைக் கூட மாற்றியமைக்கும் விதத்தில் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு பயன்படுத்தப்படக்கூடிய அபாயம் இருப்பதாகவும் சரத் என். சில்வா சுட்டிக்காட்டினார்.

# அவுஸ்ரேலிய இளம் யுவதியால் சிறுவர் வைத்தியசாலை அமைப்



(கொழும்பு)

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் சொந்தச் செலவில் இலங்கையின் புளத் சிங்கள பிரதேசத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்து கொடுத்துள்ளார்.

இவர் ஊடகத்துறையைச் சேர்ந்தவராவார். பல்கலைக்கழக மாணவியான இ... அமைத்துக் கொடுத்து இருக்கின்ற வைத்தியசாலையின் பெறு... 15 மில்லியன் ரூபாய் ஆகும்.

இவர் ஒன்பது வயதுப் பாடசாலைச் சிறுமியாக இருந்தபோ... இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு இருக்கின்றார். சுமார் ... வருடங்கள் தனிமையில் அடைத்து வைக்கப்பட்டு இருக்கின்ற...

கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து நீண்ட பிரயத்தனங்களி... பின் தப்பிய இவர் இத்திகில் அனுபவங்களை புத்தகமாக எழு...னார். புத்தகம் அமோக விற்பனை ஆனது. பல் மொழிகளி... வெளிவந்தது. இதில் கிடைத்த பணத்தை செலவு செய்து ...தியசாலையை அமைத்துக் கொடுத்துள்ளார். இவ்வை... சாலைக்கு இவரின் பெயர்தான் சூட்டப்பட்டுள்ளது.

# முறைப்பாடுகளுக்கு மூன்று நாட்களில் தீர்வு

(கொழும்பு)

மக்களின் முறைப்பாடுகளை 72 மணித்தியாலயங்களில் விசாரணை செய்யும் புதிய செயற்திட்டமொன்றை பொலிஸார் நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் சாதாரண முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு தாமதம் ஏற்படுவதாகவும் அதன் காரணமாக பெருமளவிலான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் குவிந்து காணப்படுவதாகவும் பொலிஸ் மாஅதிபர் என்.கே இலங்ககோன் தெரிவித்துள்ளார்.

எனவே குறித்த முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்வதற்காகவே புதிய நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். மக்களின் முறைப்பாடுகளை நடமாடும் சேவை உள்ளிட்ட புதிய பல முறைமைகளை பயன்படுத்தி தீர்த்து வருவதாகவும் பொலிஸ் மாஅதிபர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடைமுறைகள் குறித்து பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள் ஊடாக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

# மாணவர்கள் முழுமையான பயனை இலவசக் கல்வியால் பெறுவதில்லை



(கொழும்பு)

இலவசக்கல்வி முறையில் தற்போதுள்ள குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் இன்று முழுமையான பயன்பெற முடியாதுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டி புஷ்பதான வித்தியாலயம், பூஜாபிட்டிய மத்திய கல்லூரி, கட்டு காஸ்தோட்டை ஸ்ரீ ராகுலா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கன்னங்கரா கொண்டுவந்த இலவசக் கல்வித் திட்டத்தில் தொழிற்கல்வி முறையிருந்தது. அன்றைய மத்திய மகா வித்தியாலயங்களில் தொழிற்கல்விக் கூடங்கள் காணப்பட்டன. ஆனால் பின்னர் வந்த கல்வித் திட்டங்களில் அவை மாற்றப்பட்டதன் விளைவாக இன்று பரீட்சைமையக் கல்வியில் அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற 3 இலட்சம் மாணவர்களில் பல்கலைகழகம் செல்வது 22 ஆயிரம் பேர் மாத்திரமே. ஏனையவர்களுடைய நிலைமை குறித்து நாம் சிந்திப்பதில்லை.

கொழும்பிலுள்ள வசதி படைதவர்களுக்கு இதுவொரு பிரச்சினையே அல்ல. அவர்கள் தமது பிள்ளைகளைச் சர்வதேசப் பாடசாலைகளுக்கு அனுப்பி உயர்தரத்தில் ஓர... சித்தியடைச் செய்து ... வெளிநாடுகளுக்கு அ... வைத்தியர்களாக, பொறி...லாளர்களாக உருவாக்கு...னர். இதற்கு அதிகளவு ... செலவழிப்பதில்லை. ஒரு ...ளைக்கு 50 முதல் 100 இல... ரூபாய்கள் செலவாகின்ற...

ஆனால் இங்குள்ள ... பிள்ளைகளின் நிலைமை ...த்தே நாங்கள் சிந்திக்கின்... அதற்காகவே ஆயிரம் ப...லைகளை அனைத்து வசதி...முடைய பாடசாலைகளாக...வாக்கும் திட்டத்தை பொ... வாய்ந்த அரசு என்ற முறை... நாம் கொண்டு வந்துள்ளே...

2012 ஆம் ஆண்டு ... 2016 ஆம் ஆண்டு வரை ...ரம் இடைநிலைப் பாடசாலை... அபிவிருத்தித் திட்டத்தின்... உருவாக்கப்படும். ஆயிரம்... சாலைகளுக்கு 2012 ஆம் ஆ... இருமாடிக் கட்டடம் அமை... கொடுக்கப்படும். அதில்... பகுதியில் 50 கணினிக... கொண்ட ஆய்வுகூடம் ...கும். அனைத்து வசதிக... அங்கு காணப்படும் என்ற...

# ஊடக சூழலை மேம்படுத்துவதற்கு கோத்தாவிற்கு அழுத்தம் கொடுங்கள்

## அமெரிக்காவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சூழலை மேம்படுத்த அமெரிக்கா, இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சண்டேலீடர் ஊடகவிய லாளர்களான ஜேன்ஸ் மற்றும் முஸ்டாக் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தத் தகவலை அமெரிக்க தூதரகம், வொஷிங்டனில் உள்ள இராஜாங்கத் திணைக்களத்துக்கு அறிவித்ததாக விக்கிலீக்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரு ஊடகவியலாளர்களுக்கும் மரண அச்சுறுத்தல் கடிதம் வந்ததன் பின்னரே இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் உதவி அலுவலக மேலாளர் வெலரி புளவர் இதனை இராஜாங்கத் திணைக்களத்துக்கு 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தொடர்பில் வினவப்பட்டபோது தாம் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையே விரும்புவதாக இரண்டு ஊடகவியலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஊடகவியலாளர் திஸ்சநாயகம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இந்தக் காலப்பகுதியில் அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினியஸ் இராஜாங்கத் திணைக்களத்துக்கு பல தகவல்களை அனுப்பியுள்ளதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

# இந்திய உதவித் திட்டத்தில் வடக்கு மக்களுக்கு சைக்கிள்

இந்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடிய மர்ந்துள்ள மக்களுக்கு 10 ஆயிரம் சைக்கிள்கள் வழங்கப்பட வுள்ளன.

இந்த சைக்கிள்கள் வடமா காண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக மாவட்ட ரீதியாகச் சைக்கிள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 2 ஆயிரத்து 500 சைக்கிள்களும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2 ஆயிரம் சைக்கிள்களும் யாழ். மாவட்டத்துக்கு ஆயிரத்து ஐந்நூறு சைக்கிள்களும் வவுனியா மாவட்டத்திற்கு 2 ஆயிரம் சைக்கிள்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியாக இது ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக தகவல்கள் பெறப்பட்டு இவை வழங்கப்படவுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்கள், மாற்று வலுவுள்ளவர்களைக் கொண்ட குடும்பங்கள், பாடசாலை செல்லும் அதிக பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் மற்றும் தொழில் முயற்சிக்கு தேவையான சைக்கிள்கள் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி விடுத்த அழைப்பை புறக்கணித்தார் கனேடிய பிரத



(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள அடுத்த கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்து உரையாற்றிய போது, கனேடி யப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் மாநாட்டு அரங்கில் இருந்து வெளியேறி தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக கனேடிய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பேர்த் நகரில் நடைபெற்று வந்த கொமன்வெல்த் ...வர்களின் மாநாட்டு நேற்று மாலை நிறைவடைந்தது. மாநா... இறுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அடுத்த கொமன்... மாநாட்டில் பங்கேற் குமாறு 53 நாடுகளினதும் தலைவர்க... அழைப்பு விடுத்து உரையாற்றினார்.

...ப்புரையாற்ற ஜனாதிபதி ம... ராஜபக்ஷ அ... ...தீ கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் மாநாட்டு அ... ...ந்து வெளியேறி எதிர்ப்பை வெளிப்படுத்தியதாக க... அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையின் மனிதஉரிமை நிலைமைகள் குறித்து கனே... பிரதமர் ஹாபர், கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ... நேரடியாகப் பேசியிருந்தார்.

அப்போது அடுத்த கொமன்வெல்த் கூட்டத்துக்கு முன்னர் ... கவலைகளுக்கும் கரிசனைகளுக்கும் ஜனாதிபதி உரிய வகை... பதிலளிக்க வேண்டும் என்று கனேடியப் பிரதமர் உறுதி... கூறியுள்ளார். அவர்கள் அதைச் செய்யாது போனால் நாங்... புறக்கணிப்போம் என்று அவர் குறிப்பிட்டதாகவும் கனேடிய ஊட... தகவல் வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது